045

தொகுதி 11.] 1932ஹும் ஆகஸ்டுமீ [பகுதி 7.

No.
NOV 1932

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 6-பாகம் விலை ரூபா 11-10-0

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனாயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரட்டனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை, மென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்துகொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்

5 NOV 1937

அப்போது ஹேமவதி சீமாட்டி பரிகாசமாகச் சிரித்துக் கொண்டே, 'மோகனதாஸ் இவ்வளவு அயோக்கியத்தனமாக நடந்து கொள்வான் என்பது தெரியாமல் நானும் என் இரு குமாரிகளையும் அவனிடம் ஒப்படைத்திருந்தேன். அவன் அவர்களுடன் தனியாகவும் இருப்பதுண்டு. அவன் அழகும் இளமையும் வாய்ந்த பெண்களை மோகித்து அவர்களைத் தவறான வழியில் செலுத்திவிடாமல் என்மீது மோகங் கொண்டதற்காக அவனைப் பாராட்ட வேண்டியதுதான்' என்று கூறிக்கொண்டே ஷண்பகவல்லியை நோக்கி, 'என்ன, அம்மா! நான் கூறுவது என்ன? தெய்வாதீனமாக அவன் தன் பெண் மோகத்தில் உன் மீது ஆசைப்பட்டுவிடாமல் இருந்தானே. அதுவே போதுமானது' என்றாள். ஷண்பகவல்லி உண்மையில் மோகனதாஸினிடம் காதல் கொண்டிருந்தபடியாலும் அவனும் அதற்குச் சம்மதித்துவிட்டதாலும் ஹேமவதி கூறியது வேண்டுமென்றே குத்திப் பேசுவதுபோலிருந்தது. அதனால் அவள் வருத்தமும் அதிகரித்துவிட்டது. ஆயினும் அதையெல்லாம் வெளிக்காட்டிக்கொள்வதற்குமில்லை. ஆயினும் அவள் அவற்றையும் சமாளித்துக் கொண்டு அவள் ஹேமவதி சீமாட்டி மேற்கூறியவாறு சொல்லி முடித்ததும் அவளைப் பார்த்து ஆறுதலுக்காகப் புன்சிரிப்புச் சிரித்தாள்.

18571.

அப்போது இந்தச் சம்பாஷணையினால் ஷண்பகவல்லியடைந்துள்ள மனத்துயரத்தைப்பற்றி மதனவல்லிச் சீமாட்டி ஒன்றுமே யறியாளாதலால் அவளைப் பார்க்காமலே ஹேமவதி சீமாட்டியிடம், 'பிறகு இந்த விஷயம் எப்படி முடிந்தது?' என்று மிக ஆவலுடன் கேட்டாள். உடனே ஹேமவதி சீமாட்டி, 'எனதன்புள்ள சிநேகிதையே! இதில் என்ன ஆச்சர்யம்? இம்மாதிரி விஷயங்கள் சகஜமாக எப்

படி முடியுமோ அப்படித்தான் இதுவும் முடிந்தது. நான் மிக்க ஆத்திரத்துடனும் கோபத்துடனும் அவனை என் எதிரில் நிற்காதபடி துரத்திவிட்டேன். அது மட்டுமா? அவன் மறுபடியும் எங்கள் மாளிகையின் வாயிற்படியிலும் ஏறக் கூடாதெனக் கட்டளையிட்டு விட்டேன். அவன் என்னை ஏதோ பழிவாங்குவதாக மிரட்டிக்கொண்டே போனு னென்றாலும் அச்சத்தால் அதிகம் பீதி யடைந்திருந்தான். பாவம், அவனை இன்னும் அதிகம் துன்புறுத்த நான் விரும்ப வில்லை. என்றாலும் அவன் எனது நண்பர்கள் வீட்டுக்கு அடிக்கடி போவதை நான் எப்படிப் பொறுத்துக் கொண் டிருக்க முடியும்?' என்றாள். அதைக் கேட்டதும் மதன வல்லிச் சீமாட்டியும் அதிக பரபரப்புடன், 'மற்றொரு முறை மோகனதாஸ் என் வீட்டுக்கு வரும்போது அவன் இனி இங்கு வரலாகாதெனக் கண்டிப்பாகக் கூறி விடுகின்றேன். அந்த இளைஞனுடைய போக்கிரித் தனத்தை எங்களிடம் சொல்வதில் சிறிதும் தாமதமில்லாமல் நீங்கள் நடந்து கொண்டதற்காக நானும் ஷண்பகவல்லியும் உங்களுக்கு வந் தனம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அவன் உங்களை மிரட்டினுனு?' என்று சொல்ல ஹேமவதியும், 'ஆம். ஏதோ மிரட்டிக்கொண்டே போனுன். ஆனல் நான் அதற்காக வெல்லாம் பயப்படப் போகிறேனு? போக்கிரிகளுக்குத் தங் கள் காரியம் கைகூடவில்லை என்றால் இப்படித்தான் மிரட்டு வார்கள்' என்று கூறினுள்.

அதைக்கேட்ட மதனவல்லி, 'ஆ. அப்படியா? அவன் அத்துடன் விட்டு விட்டானு? ஏதேனும் தாறுமாறுகக் கடி தம் எழுதுவது இப்படிப்பட்டவர்களுடைய வழக்கமாயிற்றே' என்று கேட்கவும், மோகனதாஸின் மீது மற்றொரு பழி சுமத்த இடம் ஏற்பட்டது கண்டு சந்தோஷத்துடன் அவள்

ஏதோ மறந்து போனதை ஞாபகப்படுத்திக் கொள்பவள் போல் பாவனை செய்து, 'ஆம், ஆம், கூறுவதற்கு மறந்து விட்டேனே. இன்று காலை அவனிட மிருந்து ஒரு கடிதம் வந்தது. ஆனால் நான் அதைப் பிரிக்காமலும் திருப்பி யனுப்பி விட்டேன். இன்னும் பல இடங்களுக்கு நான் போக வேண்டி யிருப்பதால் நமது சம்பாஷணையை இத்துடன் நிறுத்திக் கொள்வோம். நான் போய் வருகிறேன்' என்றாள். உடனே மதனவல்லிச் சீமாட்டி, 'நீங்கள் பல நண்பர்களிடத்திலும் சென்று மோகனதாஸைப்பற்றி அவர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்று அறிவிப்பீர்க ளல்லவா? என்று கேட்க ஹேமவதி, 'அதிலென்ன சந்தேகம். அவ்வாறு எச்சரிக்கை செய்வது என் கடமை யல்லவா? உங்களிருவரிட மிருந்தும் விடை பெறுகிறேன்' என்று கூறிக்கொண்டே மிக அன்புடன் நடந்து கொள்பவள்போல் ஷண்பகவல்லியின் கையைப் பிடித்து மெதுவாக அழுத்தினாள். ஆனால் இச்செயலால் ஷண்பகவல்லியின் இருதயத்தில் கத்தியால் குத்துவதுபோ லிருந்தது. பிறகு அவள் மிக்க பெருந்தன்மை யுடையவள்போல் ஆடம்பரமாக நடந்து சென்றாள். ஷண்பகவல்லி பக்கத்திலுள்ள ஒரு அறைக்குள் சென்று ஜன்னல் வழியாக ஹேமவதி சீமாட்டி வண்டியில் ஏறிச் செல்வதைப் பார்ப்பவள்போல் பாவனை செய்தாளென்றாலும் தன்னால் அடக்க முடியாமல் வெளிப்பட்ட கண்ணீரைத் துடைத்துக் கொள்ளவே அவ்வறையில் சென்றாள். ஷண்பகவல்லியின் மனம் தீயிலிட்ட மெழுகுபோல் உருகிற்று.

27-வது அத்தியாயம்

:o:

இரு சகோதரிகள்

ஹேமவதி சீமாட்டி மேற்கண்டவாறு மதன வல்லிச் சீமாட்டியின் மாளிகையில் சம்பாஷித்துக் கொண்டிருந்தபோது அவள் வீட்டில் அவளுடைய இரு குமாரிகளான ராஜேஸ்வரியும் கற்பகமும் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதைக் கவனிப்போம். அவர்களிருவரும் தாங்கள் சாதாரணமாக மோகனதாஸிடம் பாடங்கேட்கும் தனியறையில் தனித்தனி ஆசனத்தில் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களில் மூத்தவளான ராஜேஸ்வரி தன் தாயைப்போலவே வீண் ஆடம்பரத்திலும் டாம்பீகத்திலும் பிரிய முடையவளென்றும், எவருக்கும் பணியாத கர்வி என்றும் முன்னரே கூறியிருக்கிறோமல்லவா? ஒருவருடைய முகத்தால் அவரது உள்ளத்தை யறியக்கூடிய சக்தியுடையவர்கள் அவளைக் கண்டால் அவள் அதிகமான காம உணர்ச்சியுடையவ ளென்பதை அவளது ஒளி நிரம்பிய கண்களாலும், சதா துடித்துக்கொண்டிருக்கக்கூடிய அதரங்களாலும், அவளுடைய அங்க அடையாளங்களாலும் நன்கு தெரிந்து கொள்வார்கள். அவளுக்கு அப்போது இருபத்து மூன்று வயதாதலால் அவளது அங்கங்களெல்லாம் பரிபூரண வளர்ச்சியைப் பெற்று அவளுக்கு அதிக அழகைத் தந்தன. அவளுக்கு அப்போதும் கலியாணமாகவில்லை. அது அவளுடைய குற்றமோ அல்லது ஹேமவதி சீமாட்டியின் குற்றமோ அல்ல. சாதாரணமாகப் பெண்களை யாருக்கேனும் கட்டிக் கொடுத்துவிடுவது என்னும் ஆபாச வழக்கத்தை ஹேமவதி சீமாட்டி விரும்பவில்லை யாதலின் ராஜேஸ்வரியாக

யாரைக் காதலிக்கிருளோ அவனுக்கே அவளை விவாகம் செய்து கொடுப்பதென நிச்சயித்திருந்தாள். ராஜேஸ்வரியும் பல ஆடவர்களுடன் நெருங்கிப் பழகி அவர்களில் யாரேனும் அவளை நேசிக்கிருர்களா என்று கவனித்தாள். அவள் உண்மையில் அழகுடையவளாகவே இருந்தும் எந்த ஆடவரும் அவளை விவாகம் செய்துகொள்ள முன்வரவில்லை. ஆடவரால் மெச்சத் தக்க குணுதிசயங்கள் அவளிடம் இருக்கவில்லையோ என்னமோ தெரியவில்லை. ஆகவே ராஜேஸ்வரிக்கு விவாக வயதுக்கு மேற்பட்ட பருவம் வந்தும் அவள் கலியாணமில்லாமலே இருக்க வேண்டியதாயிற்று. இதுவும் இறைவன் திருவுளம் போலும்! ஆனல் அவள் யாரையும் நேசியாமல் இருந்தாளா? அவளுடைய மனதில் சதா யாருடைய உருவமேனும் தோன்றிக் கொண்டிருந்ததா இல்லையா? என்பது பற்றி முன்னரே சில விஷயங்களைக் கூறியிருக்கிறேம். இந்த அத்தியாயத்தில் அதுபற்றி இன்னும் சிறிது விவரிக்கப்படும். ஆனல் அதற்கு முன்னர் இளையவளான கற்பகத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூறுவோம்.

கற்பகம் குணத்திலும் அழகிலும் தன் மூத்த சகோதரியினின்றும் வேறுபட்டவள். ராஜேஸ்வரியைவிட கற்பகமே அழகானவளென்று கூறலாம். ஆனல் கற்பகத்தின் அங்கங்கள் இன்னும் பூரணவளர்ச்சியைப் பெற்றுக் கண்டோர் கண்ணைக் கவரும் தன்மையுடையனவா யிருக்கவில்லை. கற்பகத்தைவிட ராஜேஸ்வரி சிறிது உலக அனுபவமுடையவளாயும் எதையும் ஆராயும் திறமையுடையவளாயும் இருந்தாள். கற்பகம் உண்மையில் பரிசுத்தமான, கள்ளங்கபடமற்ற அன்பையே கொள்வாள். ஆனல் ராஜேஸ்வரியோ தன் வயதுக்கும் குணத்துக்கும் ஏற்றவாறு காதல் கலந்த அன்புடனேயே எவருடனும் பழகுவாள்.

அவர்களுடைய தாயாரான ஹேமவதிச் சிமாட்டி மதன வல்லிச் சிமாட்டியின் வீட்டில் சம்பாஷித்துக் கொண்டிருந்த போது இவ்விரு பெண்களும் தங்களை அழகாக அலங்கரித்துக் கொண்டு மேலே விவரித்தபடி ஒரு அறையில் தனியாக உட்கார்ந்து கொண்டு அதற்கு முன்னாள் தங்கள் வீட்டில் நடந்த சம்பவத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். தங்களுடைய குருவான மோகனதாஸைப்பற்றித் தங்கள் தாயார் கூறியதுபற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சம்பாஷணையின் மத்தியில் கற்பகம் தனது தமக்கையைக்கண்டு, 'உன்னுடைய மனதில் ஏதோ ஒரு விஷயம் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அதைச் சில மாதங்களாகவே நான் அறிகிறேனென்றாலும் அதைப்பற்றிக் கேட்கவும் விரும்புகிறேனென்றாலும் அவ்வாறு கேட்க மனம் துணியவில்லை' என்று தெரிவித்ததும் ராஜேஸ்வரி அதிக ஆர்வத்துடன், 'அன்புள்ள சகோதரியே! நீ ஏன் கேட்டிருக்கக் கூடாது? உன்னிடமும் நான் என் இரகசியத்தை மூடி வைப்பேனா! இல்லவே இல்லை. நீ கேட்டிருந்தால் நான் கட்டாயம் சொல்லி யிருப்பேன். ஆனால் அது எப்படிப் பட்ட இரகசிய மென்றால் அதை நானாக என் சகோதரியிடமும் சொல்லிக் கொள்ள முடியாததாக இருக்கிறது. நீ சந்தேகப்பட்டு உண்மையைத் தெரிவிக்கும்படி கேட்டால் அப்போதுதான் அறிவிக்க முடியும்' என்றாள். அப்போது கற்பகம், 'அக்கா! நீ சிற்சில சமயங்களில் ஆத்திரத்துடனும் கோபத்துடனும் பேசுவதால் நான் என் மனதிலுள்ளதைக் கேட்கவும் அஞ்சினேன்' என்றாள்.

அதற்கு ராஜேஸ்வரி, 'அப்படி யொன்று மில்லை. இவ் விஷயத்தில் நான் பொறுமையுடன் நடந்து கொண்டிருப்பேன். என் இரகசியத்தைத் தெரிந்து கொள்வதற்கு

உனக்கு உரிமை இருக்கிற தல்லவா? நீ என்னிடம் உன் காதல் சம்பந்தமான இரகசியத்தை வெளியிட்டிருக்கிறா யல்லவா?' என்றாள். அப்போது கற்பகம், 'அப்படியானால் உன் மனதில் இருப்பதும் அப்படிப்பட்ட காதல் சம்பந்தமான விஷய மென்றே தெரிகிறது. அவ்விஷயத்தில் எனக்கு மிக சந்தோஷமே. நீ யாரையோ அந்தரங்கத்தில் நேசிக்கிறாய்போ லிருக்கிறது. நம்முடைய வயதிலும் நிலைமையிலும் நாம் ஆடவர் சம்பந்தமின்றித் தனித்து வாழ்வது கஷ்டமாகத்தான் இருக்கிறது' என்றாள். அப்போது ராஜேஸ்வரி புன்சிரிப்புடன் தன் மார்பகம் முழுதும் பூரிக்க, 'ஆம்; நான் ஒருவரிடம் அன்பு கொண்டிருக்கிறேன். ஆனால் நாம் இருவரும் பரஸ்பரம் யார் யாரிடம் அன்பு கொண்டிருக்கிறோமோ அவர்களைப்பற்றி அதிக சந்தோஷப்படுவதற்கில்லை' என்று மெதுவான குரலில் கூறினாள்.

அதைக் கேட்டதும் திடுக்கிட்ட கற்பகம், 'என்ன! நீயுமா எனது காதலரான துளசிங்கம் பிரபுவைப்பற்றி என் தாயாரைப்போல் தவறான அபிப்பிராயம் கொண்டிருக்கிறாய்? நான் அவரை எவ்வளவு அன்புடன் நேசித்தேன் என்பதை நினைக்கும்போ தெல்லாம் என் மனம் என்ன பாடுபடுகிறது தெரியுமா? உனக்கு உண்மை அன்பின் மகத்துவம் தெரியாதாகையால் நீ என் காதல் விஷயத்தில் குறுக்கிட்டு எனக்குத் தடையாகவு மிருப்பாயோ என்று அஞ்சியது முண்டு' என்றாள். அதற்கு ராஜேஸ்வரி, 'அன்புள்ள தங்காய்! நான் உன் காதல் சம்பந்தமான இரகசியத்தை வெளியிட்டு விடுவேன் என்று நீ சந்தேகப்பட்டதில்லை யல்லவா?' என்று கேட்க அவள், 'இல்லை, இல்லை. நான் அப்படிப்பட்ட சந்தேகமடைந்ததில்லை. ஆனால் துளசிங்கம் பிரபு விஷயத்தில் எனக்குள்ள அன்பை எப்படியாவது குறைத்துவிட முயற்சி செய்

வாயோ என்றும், நாங்கள் இருவரும் சந்திக்கும் காலங்களில் நீ இருந்தால் பொறாமைப்பட்டு அவரிடம் ஏதேனும் கண்டிப்பாக நடந்து கொள்வாயோ என்றும் சந்தேகித்ததுண்டு" என்று சொல்லி முடிப்பதற்குள் ராஜேஸ்வரி குறுக்கிட்டு, "நீ சந்தேகித்தபடி நான் நடந்துகொண்ட துண்டோ? ஆனால் அதற்கு மாறாக, நீங்கள் இருவரும் இரகசியமாகச் சந்தித்த காலத்தி லெல்லாம் நான் உங்களுக்குத் துணையாக இருந்ததுடன் நீங்கள் தோட்டத்தில் தனியாகச் சந்திக்கும்போது யாரும் வந்து விடாதபடி நான் காவல் காத்தே னல்லவா? நீங்கள் இருவரும் இரகசியமாக எழுதிக்கொள்ளும் கடிதத்தை ஒருவரிட மிருந்து மற்றொருவரிடம் கொடுப்பதற்கும் நானே நமது வேலைக்காரியை ஏற்படுத்தினே னல்லவா?" என்று பரிந்து கேட்டாள். அதற்குக் கற்பகமும், 'அன்புள்ள தமக்கையே! நீ இப்போது கூறிய தெல்லாம் வாஸ்தவந்தான். உன் விஷயத்தில் நான் ஆத்திர புத்தியுடன் சந்தேகப்பட்டது தவறுதான். அது கிடக்கட்டும்; இப்போது நீ அதிக அன்புடன் நேசிப்பதாக ஒப்புக் கொண்டாயே. அந்த ஆள் யார்? உன்னைப் பார்க்கும்போதே அக்குறிப்பிட்ட ஆளினிடம் நீ அதிக ஆர்வமுடையவளாய் இருக்கிறாய் என்று தெரிகிறது' என்று கேட்டாள்.

அதற்கு ராஜேஸ்வரி அதிக வெட்க மடைந்தவளே போல், 'இல்லவே இல்லை. நான் உன்னிடம் அந்த ஆள் யார் என்று சொல்லவே மாட்டேன். அது தெரிந்தால் நீ என்னை வெறுப்பாய் என்று அஞ்சுகிறேன்' என்று கூறவும், கற்பகம், 'தமக்கையே! என் காதல் சம்பந்தமான விஷயத்தில் நீ எனக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறா யல்லவா? அப்படி யிருக்கும்போது நான் உன்னைப் பரிகாசம் செய்வேனா. என் விஷயத்தில் நீ மரியாதையாக நடந்து கொள்ளவேண்டு

மென்று விரும்பும் நான் உன் விஷயத்தில் மரியாதையாக நடந்துகொள்ள மாட்டேனு? என்னுலியன்ற வரையில் இவ் விஷயத்தில் உனக்கு உதவியும் செய்வேன்? என்று தெரிவித்தாள். உடனே ராஜேஸ்வரி, 'ஆனுல் என் காதல் விஷயத்தில் அத்தகைய உதவி யொன்றும் தேவையில்லை. நான் கடிதம் எழுதிக் கொள்ள வேண்டிய அவசியமோ, இரகசியமாகத் தோட்டத்தில் சந்திக்க வேண்டிய அவசியமோ இல்லை. அது மட்டுமா? சுவர் ஏறிக் குதித்து உள்ளே வருதல், யாரையேனும் காவலுக்காக வைத்தல், இரகசியத்தை வேலைக்காரியிடத்தில் ஒப்படைத்தல் முதலிய தொந்தரைகளும் என் காதல் விஷயத்தில் கிடையாது' என்று கூறினுள். அப்போது அவள் சொல்வதன் பொருள் விளங்காமல் கற்பகம் ஆச்சர்யத்துடனும் மயக்கத்துடனும் ராஜேஸ்வரியைப் பார்த்து, 'நீ கூறுவதைப் பார்த்தால் நீ காதலிக்கும் அந்த மனிதர் நமது தாயாருக்கோ அல்லது பந்து மித்திரர்களுக்கோ அதிருப்தியை உண்டாக்கத் தக்கவரல்ல என்றே தெரிகிறது. அப்படித்தானு? என்று கேட்டாள்.

அதற்கு ராஜேஸ்வரி, 'தங்காய்! நீ நினைப்பது சரியல்ல. நான் சொல்வதைக் கேள்! சில மாதங்களுக்கு முன்னரே துளசிங்கம் பிரபுவும் நீயும் சினேகமாவதைக் கண்ட நமது தாயார் வேண்டுமென்றே அவரைக் கடிந்து பேசினுள். நீங்கள் இருவரும் நேசிப்பதை அவள் அனுமதிக்க முடியாது என்று தெரிவிக்கவே அவ்வாறு கடுமையாக நடந்து கொண்டாள். அதனுல் துளசிங்கம் பிரபு நமது மாளிகைக்கு வர முடியாமற் போய்விட்டது. அவரை வாராதபடி தடுத்துவிட்டதுடன் நமது தாயார் திருப்தி யடையவில்லை. அவரைப்பற்றி உன் மனதில் தவருன எண்ணத்தை உண்டாக்கி விடுவதற்காக அவர் உயர்ந்த அந்தஸ்திலும் குடும்பத்திலும்

பிறந்தவராயினும் இப்போது நல்ல நிலைமையில் இல்லாமல் பண முடை ஏற்பட்டவராக இருப்பதாகவும், மேலும் அவர் கலியாணம் செய்துகொண்டிருப்பதாயும், அம் மனைவியும் இன்னும் உயிருடன் இருப்பதாகவும், மற்றும் பல விஷயங்களையும் உன் காதில் விழும்படி சமயம் கிடைத்த போதெல்லாம் சொல்லி வந்தாள். எப்படியாவது உன் மனதில் அப் பிரபுவினிடம் ஒரு வகையான வெறுப்பு ஏற்பட்டுவிட வேண்டுமென்பதே அவளுடைய அபிப்பிராயம்' என்று கூறினாள். அதைக் கேட்ட கற்பகம்; 'அக்கா! என் மனதில் அதிக துயரத்தை உண்டாக்கும் அப்பழைய விஷயங்களையெல்லாம் ஏன் பேசுகின்றாய்? அதை இப்போது ஞாபகத்துக்குக் கொண்டு வர வேண்டிய அவசியமென்ன? நான் உன் காதல் சம்பந்தமாக உன்னிடமிருந்து எதிர்பார்க்கும் விஷயத்துக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?' என்று அவளுடன் கேட்டாள்.

அப்போதும் அவள் அப்பேச்சையே தொடர்ந்து பேசுவதை நிறுத்தாமல் மீண்டும் அதையே தொடர்ந்து, 'நான் ஏன் அதையெல்லாம் கூறுகிறேன் என்றால் துளசிங்கம் பிரபுவினிடமிருந்து உன்னைப் பிரிக்க நமது தாயார் எவ்வளவு சிரமப்பட்டாள் என்பதைத் தெரிவிப்பதற்காகவே யாகும். அவரிடம் உனக்குச் சிறிதும் அன்பில்லாததைப்போல் நடந்து கொண்டு நமது தாயின் விருப்பம் நிறைவேறி விட்டதாகப் பாவனை காட்டும்படி உனக்கு யோசனை கூறினேனல்லவா? அதனால்தான் அவள் நின்றாள். இல்லாவிட்டால் எப்படியாவது முயற்சி செய்து உங்களிருவரையும் பூரணமாகப் பிரித்துவிட் டிருப்பாளென்பது நிச்சயம்' என்று கூறியதும் கற்பகம், 'இல்லவே இல்லை. எங்களைப் பிரிக்க யாராலும் முடியாது. நான் எனதன்புள்ள துளசிங்கம் பிரபுவை

எவ்வளவு தூரம் நேசிக்கிறேனென்பது உனக்குத் தெரிந்த விஷயம் தானே. அது கிடக்கட்டும். உன் சமாசாரத்தைச் சொல்' என்று கேட்டாள். அதற்கு அவள், 'ஆம்; அதைத் தான் சொல்லப்போகிறேன். நான் நேசிக்கும் ஆளைப்பற்றி நான் எவ்விதத்திலும் வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை. ஆயினும் துளசிங்கம் பிரபுவை நமது தாயாரும் மற்றவர்களும் வெறுக்கிறார்களென்றாலும், நீ இன்னமும் அவரிடம் அன்புடனேயே இருக்கிறாய் என்பதை அறிந்தால் வெறுப்பு அதிகமாகுமென்றாலும், நான் காதலிக்கும் ஆளைக் கவனிக்கும்போது அவர்கள் துளசிங்கம் பிரபுவையே ஏற்றுக் கொள்வார்கள்' என்று சொன்னதும் கற்பகம், 'ராஜேஸ்வரி! உன் பேச்சு எனக்கு அச்சத்தை அளிக்கின்றது. உன்னால் காதலிக்கப்பட யோக்கியதையில்லாத ஒருவனை நீ நேசிக்கிறாயா? என்ன' என்று ஆவலுடன் கேட்டாள்.

அப்போது ராஜேஸ்வரி, 'யோக்யதை என்று கூறிய பதம்தான் எனக்கு விளங்கவில்லை. ஒரு மாது நேசிக்கும் ஒருவன் கண்யம் வாய்ந்தவனாயும், யோக்கியவானாயும், தக்க அழகுடையவனாயும், நற்குண நல்லொழுக்கங்களுடையவனாயும் இருக்கும்போது அவன் அம்மாதின் நேசத்துக்கு யோக்கியதை யுடையவனல்ல என்று கூற யாரால் முடியும்? அழகில் மற்ற பிரபுக்களைவிட மேம்பட்டவனாய் இருக்கும்போது அவன் பிரபுகுலப் பெண்ணுக்கு ஏற்றவனல்ல என்று எப்படிக் கூறுவது? ஆயினும் உலக மக்கள் சாதாரணமாக இப்படியே நினைக்கின்றனர். அவன் பணக்காரக் குடும்பத்தில் பிறக்காமையால், அவன் மிக்க தாழ்ந்த வேலையில் ஈடுபட்டிருப்பதால் அவன் ஒரு பிரபு வம்சத்துப் பெண்ணால் காதலிக்கப்படலாகாதா? என்று கூறியதைக் கேட்டதும் கற்பகத்தின் மனதில் உண்மை இன்னதென்று விளங்கவே, 'அப்படி

யும் இருக்குமா?' என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள். அப்போது ராஜேஸ்வரி, ஆம்; நான் இது சம்பந்தமாய்ச் சொல்ல வேண்டியதை யெல்லாம் சொல்லிவிட்டேன். நீ மனமார நேசிக்கும் துளசிங்கம் பிரபுவும், அந்த அந்தஸ்தில் இல்லாமல் கேவலம் ஒரு வண்டியோட்டியாக இருந்தாலும் அவரை நீ நேசித்தது தவறு என்று சொல்லியிருக்கமாட்டேன். நானும் அவரை அதற்காக வெறுத்திருக்க மாட்டேன்' என்று துயரத்துடன் கூறுபவள்போல் படபடப்புடன் கூறினாள். அதற்குக் கற்பகம், 'நான் உன் மனம் புண்படும்படி ஏதேனும் சொல்லிவிட்டிருந்தால் தயவுசெய்து என்னை மன்னித்துவிடு, எனக்கும் தெரியாமல் ஆச்சர்யத்துடன் ஏதேனும் சொல்லி விட்டிருப்பேன்' என்று கூறிக்கொண்டே அவளது இரு கரங்களையும் ராஜேஸ்வரியின் கழுத்தைச் சுற்றிலும் போட்டுக் கொண்டு கண்ணீர்விட்டு அழுதாள்.

இதைக் கண்ட ராஜேஸ்வரி சற்று சந்தோஷமடைந்து தன் தங்கையை மன்னித்தவளாய் அவளுடைய கரங்களை அப்புறம் எடுத்துவிட்டு மெதுவான குரலில், 'இப்போது நான் நேசிக்கும் ஆள் யாரென்பதை நீ அறிந்து கொண்டிருப்பாய் அல்லவா?' என்று கேட்டதும் கற்பகமும் மறு நிமிஷமே தன் சகோதரியின் காதில் மெதுவாக, 'ஆம் தெரிந்துகொண்டேன். நமது மோகனசுந்தரம் தானே' என்று கூறியதும், கற்பகம் மறுபடியும் தவறாக ஒன்றும் நினைத்து விடக் கூடாதென்னும் எண்ணத்துடன் ராஜேஸ்வரி அதிக பெருமையுடனும் டாம்பீகத்துடனும் பேசுவதுபோல், 'ஆம்; அவன்தான். நம்மிடத்தில் வேலை செய்யும் அழகும் யௌவனமும் வாய்ந்த மோகனசுந்தரமே. அவன் நம் வீட்டு வேலைக்காரனாயிருந்தாலும் எனக்கு அவனிடம் அளவிளா அன்பு ஏற்பட்டிருப்பதாலும், அவனும் தக்க அழகும் யௌவனமும்

உடையவனாக இருப்பதாலும் அவனைக் காதலிப்பதில் நான் ஒருவிதமான பெருமையையே யடைகின்றேன்' என்று கூறினாள். அதைக் கேட்டதும் கற்பகம் ஒன்றும் பேசாமல் எதிரில் இருந்த தன் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு தன் காதல் சம்பந்தமானதும் தனது சகோதரியின் காதல் சம்பந்தமானதுமான பல விஷயங்களைப் பற்றிச் சிந்திக்கலானாள்,

சிறிது நேரம் வரை இருவரும் பேசாமல் மௌனமாக இருந்தனர். சற்று நேரத்துக்குப் பின்னர் ராஜேஸ்வரி தன் தங்கையினிடம் 'கற்பகம்! நீ துளசிங்கம் பிரபுவை மனமார நேசிக்கின்றாய். இன்னும் சொற்ப காலத்துக்குள் இறைவன் அருளால் நல்ல காலம் ஏற்பட்டால் நீ அவரையே மணந்து கொள்வது நிச்சயம். நமது தாயும் மற்றவர்களும் அதை எதிர்ப்பதை நீ கவனிக்கப்போவதில்லை. அப்படிச் செய்தாலும் நீ இன்ப வாழ்க்கையையே அனுபவிப்பாய். காதலுக்காக நீ சுகத்தைப் பெறும்போது அதே காதலுக்காக நான் அந்தச் சுகத்தைத் தியாகம் செய்ய வேண்டியிருக்கிறது. நீ துளசிங்கத்தை எவ்வளவு நேசிக்கிறாயோ அப்படியே நானும் எனது மோகனத்தை நேசிக்கிறேன்' என்று கூறினாள். அப்போது கற்பகம், 'அப்படியானால், உன் காதல் சம்பந்தமான விஷயத்தைப்பற்றி நான் எதையும் பேசமாட்டேன். மோகன சுந்தரம் நீ அவனை நேசிக்கிறாய் என்பதை அறிவானா? அவனிடம் தெரிவித்திருக்கிறாயா?' என்று கேட்டாள்.

அதற்கு அவள், 'இல்லை. வார்த்தைகளால் தெரிவிக்கவில்லை. கண் பார்வையாலும் மற்றும் பலவிதக் குறிப்புகளாலும் நான் அவனை நேசிக்கிறேன் என்பது அவனுக்குத் தெரியும். கற்பகம்! நான் அவனைத் திடீரென்று நேசித்துவிடவில்லை. கண்ணுற் கண்டதும் காதலிக்கவில்லை. அவனிடம் எனக்கு

அன்பு ஏற்பட்டபோதெல்லாம் அதை மறந்துவிட எவ்வளவோ முயன்றேன். நம்மிடம் வேலைக்காரனாக இருக்கும் ஒருவனை நேசிப்பதா என்று யோசித்துப் பார்த்தேன். எனக்கே அவமானமாகவும் இருந்தது. ஆனால் உள்ளூர அந்தரங்கத்தில் எனக்கு அவனிடம் தணியாக் காதல் பெருகிக்கொண்டே வந்து இறுதியில் என்னால் அடக்க முடியாதபடி அதிகரித்துவிட்டது. அவன் வேலைக்காரனாயினும் அவனுடைய அழகும் யௌவனமும் மெச்சத் தக்க தல்லவா? அவனுக்கு நல்ல விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களைத் தந்தால் இன்னும் எவ்வளவோ அழகாகத்தா னிருக்கும். மேலும் நம் மாளிகைக்குப் பல பிரபுக்களும் மற்றவர்களும் வருகிறார்களே அவர்களில் யாரேனும் ஒருவராவது நமது மோகன சுந்தரத்தைவிட அழகாக இருக்கிறார்களா? அவனுடைய சரித்திரம் நமக்குத் தெரியா தாகையால் அவன் யார் என்பதும் நமக்கெப்படித் தெரியும்? அவன் முதலில் ராஜ சமூகத்தில் வேலைக்காரனாக இருந்தானாம். திடீரென்று அவன் அங்கிருந்து விலக்கப்பட்ட படியால் ஜீவனத்துக்கு வழி யில்லாமல் இருக்கவே நமது தந்தை அவனை இங்கே சேர்த்துக்கொண்டார். ஆகவே அவன் விருத்தாந்தத்தில் ஏதோ மர்மம் இருக்கிறது. இவ்வாறு இருப்பதாகத் தெரிந்ததால் தான் எனக்கு அவனிடம் அபிமானம் ஏற்பட்டுப் பிறகு அது காதலாக மாறியது' என்று விவரமாகத் தெரிவித்தாள்.

ராஜேஸ்வரி தன் காதல் விஷயத்தைப்பற்றிச் சாவதானமாகக் கூறியதைக் கேட்ட கற்பகம் உண்மையிலேயே அவளிடம் அனுதாப மடைந்து, 'உன் இக்காதல் விஷயத்தில் நீ வெற்றி யடைய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். ஆனால் நீ அவனை நேசிப்பதாக அவனிடம் கூறவில்லை என்கிறாயே, அதுதான் வருத்தமாக இருக்கிறது. அவனை நீ நேசிக்கிறாய்

என்பது அவனுக்குத் தெரியுமென்று நினைக்கிருயா?' என்று கேட்டாள். உடனே அவள், 'ஆம். அவனுக்குத் தெரியுமென்பது நிச்சயம். அது மட்டுமா? அவனும் என்னைத் திருப்பி நேசிக்கிருன் என்பதும் நிச்சயம். அதை நான் அவனது நடவடிக்கைகளால் தெரிந்து கொண்டேன். அவனும் என்னைத் திருப்பி நேசிக்கிருன் என்பதும் உண்மை. ஆனல் அவன் தன் நிலைமையைக் கவனிக்கும்போது தன் அன்பைத் தெரிவிக்க அஞ்சுகின்ருன். அது சகஜம் தானே. நான் முதலில் தெரிவித்தால் அவனும் அதற்குச் சம்மதிப்பான். இரண்டொரு வாரங்களாக நான் அவனைத் தனியாகச் சந்திக்கும்போதெல்லாம் இதைத் தெரியப்படுத்த ஆவல் கொள்கிறேன். ஆனல் வாயெடுத்துப் பேச முடியவில்லை. எனினும் அடுத்த முறை அவனைச் சந்திக்கும்போது' என்று சொல்லி முடிப்பதற்குள் அவ்வறையின் கதவைத் திறந்துகொண்டு வேலைக்காரி உள்ளே வந்தாள். அச் சகோதரிகளின் சௌகரியத்தைக் கவனிப்பதே அவ்வேலைக்காரியின் தொழில். உள்ளே நுழைந்ததும் அவளுடைய முகத் தோற்றத்தினல் அவள் வந்த வேலையை அறிந்துகொண்ட கற்பகம் 'அவர் இங்கே வந்திருக்கிருரா?' என்று கேட்டாள். அதற்கு அவள், 'இல்லை. இதோ இக் கடிதத்தை அனுப்பியிருக்கிருர்' எனக் கூறிக்கொண்டே தன் மடியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து இளைய சகோதரியாகிய கற்பகத்தினிடம் கொடுத்தாள்.

அக் கடிதத்தை அவள் படித்து முடிந்ததும், அதிக சந்தோஷத்துடன் தன் முகத்தில் ஒருவிதமான ஒளி வீச, 'அவர் பகல் நான்கு மணிக்கு இங்கே வருவார். வேலைக்காரி! நீ வழக்கப்படி பகலில் பின்புற வாயிலுக்கு வெளியே இருந்து அவரது வரவை எதிர் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும்' என்று கூறினள். அவள் அவ்வாறு கூறியதும் வேலைக்காரி

அவ்விடத்தை விட்டுச் சென்றாள். கற்பகம் மணி என்ன என்று கடிகாரத்தைப் பார்த்ததில் மூன்றரை மணியாய்விட்டிருந்ததால் வேறு உடைகளை அணிந்துகொள்ளச் செல்லும் உத்தேசத்துடன், 'அக்கா! நான் போகப்போகிறேன். உன் விஷயம் என்ன' என்றாள். அதற்கு ராஜேஸ்வரி, 'தங்காய்! என்னைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். நான் என் வேலைகளைக் கவனிக்கச் செல்கிறேன். நீயும் துளசிங்கம் பிரபுவும் தோட்டத்தில் தனியாகப் பேசும்போது நானும் ஜாக்கிரதையாகக் காவல் காத்துக்கொண்டிருப்பேன் என்பதை நிச்சயமாக நம்பு' என்றாள். கற்பகம் தன் தமக்கைக்கு வந்தனம் செலுத்திவிட்டு அவ்வறையை விட்டுச் சென்றாள். அவள் சென்ற சிறிது நேரத்துக்குள் அவ்வறையின் கதவு திறக்கப்பட்டதும் அம்மாளிகையின் வேலைக்காரர்களில் ஒருவனான மோகன சுந்தரம் அன்று கிடைத்த முக்கிய செய்திகளடங்கிய பத்திரிகையை எடுத்துக்கொண்டு அவ்வறையில் நுழைந்தான்.

28-வது அத்தியாயம்

எஜமானியும் வேலையாளும்.

ராஜேஸ்வரி, தான் தனியே உட்கார்ந்திருக்கும் அறையில், தன்னால் அதிகம் நேசிக்கப்பட்ட மோகன சுந்தரம் வந்ததைக் கண்டதும் அளவிலா ஆனந்தமடைந்தாள். அவள் அங்கம் முழுதும் பூரித்தது. கண் பார்வை அவ்விளைஞன்மீது பாணம்போல் பாய்ந்தது. அவள் கன்னத்தில் இரத்தம் விறிட்டுப் பாய்ந்ததால் சிவந்தது. உண்மையில் மோகன சுந்தரம் அவ்வீட்டில் வேலைக்காரனாயிருக்

தானென்றாலும் அவன் நற்குடியில் பிறந்து நற்குண நல்லொழுக்கங்களுடையவ னாதலால் அழகாகவும், கம்பீரத் தோற்றமுடையவனாகவும் இருந்தான். அவன் கொண்டு வந்த பத்திரிகையை அவனுடைய கையிலிருந்து வாங்க முயன்றபோது அவளுடைய கைகள் நடுங்கின. ஏன்? மனதில் பற்பல சிந்தனைகள் தோன்றியதால் அவளுக்கு அவ்வாறு அச்சம் தோன்றியது. எனினும் சிறிது துணிந்து அதைப் பெற்றபோது அவளுடைய கரம் அவனது கைக்குப் படும்படி செய்து அதைப் பெற்றாள்.

அவளுடைய கரம் மோகனசுந்தரத்தின் தேகத்தில் பட்டமாத்திரத்தில் மின்சார சக்தி பாய்ந்ததேபோல் அவன் தேகம் முழுதும் சிலிர்த்தது. எனினும் அவன் ஒருவாறு சமாளித்துக்கொண்டு அவ்வறையைவிட்டு வெளியே செல்ல முயன்றான். அப்போது ராஜேஸ்வரி மிக்க சிரமத்துடன் துணிந்து, 'மோகனம்! போகாதே. இரு. நான் உன்னுடன் சில விஷயங்களைப் பேசவேண்டும்' என்றாள். உடனே அவன், 'அப்படியே ஆகட்டும்' என்று சொல்லிக்கொண்டே தேகம் நடுங்க தலையைக்குனிந்தவண்ணம் ராஜேஸ்வரி உட்கார்ந்திருந்த நாற்காலியின் அருகில் நின்றான். அதைக் கண்ட அவள், 'மோகனம்! ஏன் நடுங்குகின்றாய்? உனக்கென்ன அவ்வளவு அச்சம்? நான் என்ன சொல்லப்போகிறேன் என்பது உனக்குத் தெரிந்திருக்கும். அதைச் சொல்வது எனக்கும் கஷ்டமாகத்தா னிருக்கிறது. நான் உன்னை நேசிக்கிறேன். அது சத்தியம்' என்று தெரிவித்துக் கொண்டாள்.

அதைக் கேட்டதும் திக்பிரமையும் ஆச்சர்யமும் அடைந்த மோகனசுந்தரம் இன்னும் அதிக அச்சத்தால் மெய் நடுங்க, 'ஐயோ, கடவுளே! இதென்ன பாவம்! நீ

சொல்வது இன்னதென உனக்கே புரியவில்லையா?' என்று பிரபு குலத்தி லுதித்தவளும், அழகிற் சிறந்தவளும், தன் காதலை வெளிப்படுத்தியவளுமான ராஜேஸ்வரியை நோக்கிக் கேட்டான். அப்போது ராஜேஸ்வரி காம உணர்ச்சி மேலிட்டவளாய்த் தன் பார்வை முழுவதையும் அந்த இளைஞன்மீது செலுத்தியவண்ணம், 'நான் சொல்வது எனக்கு விளங்காமலென்ன? நான் உன்னை நேசிப்பதை இனியும் மறைத்து வைக்க என்னால் முடியாது. நான் உண்மையாகவே உன்னை நேசிக்கிறேன். எனக்கு ஏற்பட்டுள்ள உணர்ச்சி அடக்க முடியாததாக இருக்கிறது. இப்போது நீ செய்யும் வேலை இல்லாமல் பெரிய பிரபுவின் குமாரனாகவே இருந்தாலும், அப்போது எனக்கு இப்போது ஏற்பட்டுள்ள உணர்ச்சியை விட அதிகமான உணர்ச்சி ஏற்பட்டிராது. மோகனம்! நீ என்னைத் திரும்பி நேசிக்கிறாயா? இல்லையா? தெரியப்படுத்தவும். நீ என்னை நேசிக்கிறாய் என்பதை நான் பலவகைகளால் தெரிந்துகொண் டிருக்கிறேன். ஒருவரை நேசிக்கவும் அவரால் நேசிக்கப்படவுமாக இருப்பது பெரிய சுவர்க்க போகமாகும்,' என்று கூறிக்கொண்டே மோகனசுந்தரத்தின் கையைப் பிடித்துக்கொண்டு முழு ஆர்வத்துடன் அதை அழுத்தினாள்.

அப்போது அவன் அதிக மனக்குழப்பத்துடன், 'இதை ஹேமவதி சீமாட்டி அறிந்தால் ஏதேனும் சொல்லமாட்டாரா?' என்று கேட்க, அவள், 'எனதன்புள்ள மோகனம் இதை அவள் அறியவேண்டிய அவசியமில்லை. நீ என்னை நேசிக்கிறாயா? என்பதை உடனே தெரியப்படுத்து' என்று அவனுடன் கேட்டாள். அச்சமயம் அவன் மிக்க வெட்கத்துடன் மெதுவான குரலில், 'ஆம்; நானும் உன்னை நேசிக்கிறேன்' என்று பதிலளித்தான். உடனே அப்பெண்மணி

அதிக சந்தோஷத்துடன் அவளது இருகரங்களையும் அவனது கழுத்தில் போட்டு அவனை மார்புறத் தழுவிக்கொண்டு இனிய முத்தமொன்றை அவனுக்குத் தந்து, 'நான் மனமார உன்னைக் காதலிக்கிறேன். நீ இந்த முத்தம் பெற்றதும் வேலை தீர்ந்துவிட்டதெனப் போய்விட வேண்டாம். உன்னுடன் இன்னும் சில விஷயங்களைப் பேசவேண்டியிருக்கிறது. உன்னிடத்தில் அன்பாக நடந்துகொள்ளக்கூடிய சினேகிதர்களாவது பந்துக்களாவது இருக்கிறார்களா?' என்று கேட்டுக்கொண்டே அருகிலிருந்த ஆசனத்தில் அமர்ந்தாளென்றாலும் தன் இரு கரங்களாலும் அவனது கையை இறுகப் பிடித்துக்கொண்டிருந்தாள். அப்போது அவ்விளைஞன், 'ஆம், எனக்கு ஒரு சகோதரி இருக்கிறாள். ஆனால் சொற்பகாலமாக அவளைப்பற்றி எவ்வித தகவலும் தெரியவில்லை' என்று துக்கத்துடன் கூறினான்.

அச்சகோதரி அவனைவிட மூத்தவளா அல்லது இளையவளா என்று ராஜேஸ்வரி கேட்டதற்கு அவள் பல வருஷங்கள் மூத்தவளென அவன் தெரிவித்ததும் அவள், 'உன் பெற்றோர்கள் சமாசாரம் ஏதேனும் உனக்குத் தெரியுமா? அவர்களைப்பற்றி உனக்கொன்றும் தெரியாதென்று ஒரு பிரபு என் தாயாரிடம் சொல்ல நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அது உண்மைதானா?' என்று விசாரித்தாள், அதற்கு அவன், 'ஆம்; அது உண்மைதான். நான் குழந்தைப் பருவம் முதலே யாரையும் அப்பா, அம்மா என்று கூப்பிட்டதாகவே ஞாபகமில்லை. ஆனால் நான் சில தடவைகளில் என் தாயாரைப் பார்த்திருக்கவேண்டும் என்னும் திடமான நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனினும் நானும் அம்மாதை அம்மா என்று கூப்பிட்டதில்லை,' என்று தெரிவித்தான். அப்போது அவள், 'எனதன்புள்ள மோகனம்!

உன்னுடைய பழைய விருத்தாந்தத்தைப்பற்றி உனக்குத் தெரிந்ததை யெல்லாம் விவரமாக என்னிடம் கூறு. உன் சம்பந்தமான எல்லா விஷயங்களையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆவல் எனக்கு அதிகமாக இருக்கிறது' என்று கூறிக்கொண்டே அன்புகனிந்த பார்வையுடன் அவனைப் பார்த்தாள்.

அப்போது மோகனசுந்தரம் பின்வருமாறு தன் சரித்திரத்தைக் கூறலானான்:—நமது இரத்தினபுரிக்குச் சமீபத்திலுள்ள ஒரு குடிசையில் நான் குழந்தையா யிருக்கும்போது வளர்க்கப்பட்டது ஞாபகத்திலிருக்கிறது. என் சகோதரி என்னைவிட ஏழெட்டு வயது பெரியவளாக இருந்தும் பள்ளிக்கூடம் போகவில்லை. பனிபாய் என்னும் ஒரு கிழவி எங்களை வளர்த்து வந்ததுடன் என் சகோதரிக்கும் படிப்பும் சொல்லிக் கொடுத்து வந்தாள். நான் ஆறு வயதினனாக இருக்கும்போது ஒருநாள் அந்தப் பனிபாய் என்னும் கிழவி என்னையும் என் சகோதரியையும் வாடகை வண்டி யொன்றில் எங்கள் குடிசையிலிருந்து வெகு தூரத்திலுள்ள ஒரு இடத்துக்கு அழைத்துச் சென்ற சம்பவம் என் ஞாபகத்திலிருக்கிறது. நாங்கள் சிறிது தூரத்திலுள்ள ஒரு கிராமத்தையடைந்ததும் அங்கு எங்களுக்காக மற்றொரு வண்டி காத்திருந்தது அந்த கோச்வண்டி மிக அழகானதா யிருந்ததுடன் அதை ஓட்டுவதற்கு இருவர் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அந்த வண்டியில் நாங்கள் ஏறியதும் இரத்தினபுரியில் ஒரு பெரிய நந்தவனத்துக் கருகில் இருந்த அழகிய நேர்த்தியான வீட்டின் முன் அது போய் நின்றது. வண்டியினின்றும் கீழே இறங்கியதும் எங்களால் பாட்டி என்று அழைக்கப்பட்ட பனிபாய் என்னும் அக்கிழவி என்னையும் என் சகோதரியையும் அவ்வீட்டின் மாளிகையிலுள்ள ஒரு

அறைக்கு அழைத்துச் சென்றாள். அங்கே ஒரு மாது வியாதியுடன் படுக்கையில் படுத்திருந்தாள். அம்மாதின் படுக்கையின் இருபக்கங்களிலும் வேறு இருமாதர்கள் உட்கார்ந் திருந்தார்கள். அம்மாதர் இருவரும் என்னுடனும் என் சகோதரியுடனும் மிக்க அன்புடன் பேசினார்கள். பிறகு அவர்களிருவரும் அவ்வறையை விட்டுச் சென்றதும் படுக்கையில் வியாதியுடன் இருந்த மாது எங்களிருவரையும் அன்புடன் பலமுறை முத்தமிட்டதுடன் அதிகம் அழுதாள். அவள் வியாதியால் தேகம் முழுதும் வெளுத்துப் போயிருந்த தென்றாலும் மிக்க அழகானவள் என்பதில் ஆட்சேப மில்லை. நாங்கள் சுமார் ஒருமணி நேரம் அங்கே இருந்தோம். அந் நேரமெல்லாம் அம்மாது என்னைப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள். என் முதுகில் தட்டிக் கொடுத்தாள். அன்புடன் உரையாடி முத்தமிட்டாள். அம்மாது என் சகோதரியினிடமும் அவ்வாறே அன்புடன் நடந்து கொண்டாள். பனிபாய் எங்களை அவ்விடத்தினின்றும் அழைத்துச் செல்ல முன்வந்தபோது அந்த மாது துக்கம் பொறுக்க முடியாமல் ஓவென்று அழுதாள். அதைக்கண்டு நானும் என் சகோதரியுங்கூட அழுது விட்டது என் ஞாபகத்துக்கு வருகிறது. பிறகு நாங்கள் பழையபடி எங்கள் குடிசைக்கு வந்து சேர்ந்தோம்.

அடுத்த வாரமே என் சகோதரி சமுத்திரக் கரையோரத்தில் ஒரு ஊரிலுள்ள தர்ம பாடசாலைக்கு அனுப்பப்பட்டாள். நான் மட்டும் தனியாக பனிபாயுடன் வசித்து வந்தேன். தேக அசௌக்கியத்துடன் இருந்த அம்மாதைப் பார்த்து விட்டு வந்த ஒரு வருஷத்துக்குப் பின்னர் ஒருநாள் மாலை பனிபாய் என்னை இரத்தினபுரிக்கு அழைத்துச் சென்று கடிகாரத்தையுடைய கோபுரத்துடன் கூடிய மாளிகைக்கு

அழைத்துச் சென்றாள். நாங்கள் இருவரும் அம்மாளிகை யில் நுழையும்போதே பனிபாய் என்னிடம், முன்பு வியாதி யுடனிருந்து நான் கண்ட அம்மாதையே அம்மாளிகையில் காணப் போவதாகத் தெரிவித்தாள். அதைக் கேட்டதும் நான் மிக்க சந்தோஷ மடைந்தேன். ஏனெனின் அம்மாது என்னிடம் அதிக அன்புடன் நடந்துகொண்டதால் நான் அவளை அதிகம் நேசித்தேன். நாங்கள் அங்கு ஒரு கூட்டத் தில் போய்ச் சேர்ந்ததும் விலை யுயர்ந்த கரியபட்டு உடை களை அணிந்துகொண்டும் மார்பின் மீது ஒரு நட்சத்திரக் குறியை அணிந்துகொண்டு மிருந்த ஒரு கனவான் எதிரி லிருந்த அறையிலிருந்து வெளியே வந்து பனிபாயுடன் குசு குசு வென்று எனக்குத் தெரியாதபடி எதையோ பேசிவிட் டுப் போனார். பிறகு நாங்கள் அந்த அறைக்குப் போனோம். அங்கே இரத்தினபுரி ராஜ்யத்தை ஆண்ட மன்னர்களின் பெரிய படங்கள் தொங்கவிடப் பட்டிருந்தன. சொற்ப நேரத்துக்குள் அந்த அறைக்குள், முன்பு நான் வியாதியுடன் இருந்ததாகக்கண்ட அதே மாது தோன்றினாள். அப்போது அவள் எத்தகைய வியாதியுடனு மில்லாமல் இருந்ததால் இன்னும் அழகுடையவளாகத் தோன்றினாள். உடனே அம்மாது என்னைத் தூக்கி எடுத்துப் பல முத்தங்களைத் தந் தாள். நானும் அம்மாதை நோக்கி அவள்தான் என் தாயாரோ என்று கேட்டதாகவும் ஞாபக மிருக்கிறது. ஆனால் அவள் ஒன்றும் பதில் சொல்லாமல் என்னைத் தன் மார்புறத் தழுவிக் கொண்டாள். அந்தத் தடவை நான் அவ்விடத்தில் அரை மணி நேரம்தான் இருந்தேன். இதற்குள் பனிபாய் என் னைப் பழைய இருப்பிடத்துக்கு அழைத்துச் சென்றான்.

என்று அவன் சொல்லி முடிக்கு முன் ராஜேஸ்வரி, 'ஆ! இதை யெல்லாம் கேட்க மிக்க ஆச்சர்யமாய் இருக்

கிறது. முழுதையும் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டு மென்னும் ஆவல் அதிகமாக இருப்பதால் உடனே விவர மாகச் சொல்' என்று பரிவுடன் கேட்டாள்.

அப்போது மோகனசுந்தரம் மீண்டும் பின்வருமாறு விவ ரிக்கலானான். நான் இப்போது கூறிய சம்பவத்துக்குப் பின் பத்து மாதங்கள் கழிந்த பின்னர் பணியாய் திடீரென நோய் கண்டு அதினின்றும் தேறாமல் இறந்து விட்டாள். அவள் என்னை அன்புடன் வளர்த்து வந்தபடியாலும், அவள் என் பாட்டியாரோ என்று நினைத்திருந்தாலும் அவள் இறந்து போனதும் நான் ஓவென்று அழுதேன். அங்கிருந்த ஒரு வேலைக்காரி அவள் என் பாட்டியல்ல என்று தெரிவித்தாள். ஆனால் நான் அவளைப்பற்றிச் சில விவரங்களை அவ்வேலைக் காரியிடம் கேட்டதற்கு அவள் ஒன்றும் தெரியாதவள் போல் இருந்து விட்டாள். பணிபாய் இறந்துபோன மறு நாள் முன்பு மாளிகையில் மார்பில் நட்சத்திரக் குறியுடன் இருந்தபோது கண்ட ஆதேபிரபு அங்கே வந்தார். அவர் வந்ததும் ஒரு அறையில் இருந்த பணிபாயின் பெட்டியைத் திறந்து சில கடிதங்களைத் தன் சட்டப்பையில் போட்டுக் கொண்டார். வேறு சில கடிதங்களைச் சேர்த்துக் கொளுத்தி விட்டார். இதையெல்லாம் நானும் அதே அறையில் இருந்து பார்த்துக்கொண்டிருந்தேன். பிறகு பணிபாயின் பிரேதத்தை மிக்க எளிய முறையில் அடக்கம் செய்துவிட்டார். பிறகு அப் பிரபு, முதலில் ஒரு மாது வியாதியுடன் இருந்தபோது அம்மாதை எங்குக் கண்டேனோ அந்த விடுதிக்கு அழைத் துச் சென்றார். அங்கு அம்மாது விலையுயர்ந்த ஆடை ஆப ரணங்களால் அலங்கரித்துக்கொண்டு சிங்காரிக்கப்பட்ட ஒரு அறையில் முன்பு நான்கண்ட வேறு இரு மாதர்களும் என் னைக் கொஞ்சிய பிறகு என்னை அழைத்துவந்த கனவானுடன் வெளியே போய்விட்டார்கள்.

பிறகு நானும் அம்மாதும் மட்டும் அவ்வறையில் இருந்தோம். அப்போது எனக்கு வயது எட்டு. அம்மாதைப் பற்றி எனக்குக் கவனமிருக்கிறதா என்று அவள் கேட்டாள். அதற்கு நான் நன்ருக ஞாபக மிருப்பதாகச் சொன்னதும், நான் அவளைப் பார்த்துவிட்டுப் போனபிறகு எப்போதேனும் அவளைப்பற்றி நினைத்ததுண்டா என்று கேட்டாள். அதற்கு நான், அவளைப்பற்றிப் பலமுறை நினைத்த துண்டென்றும், சிற்சில சமயங்களில் இராக்காலங்களில் அவள் என் அருகில் இருப்பதுபோல் கனவு கண்டதாகவும் கூறும்போது அவளுடைய கண்களினின்றும் நீர் ஆருகப் பெருகிக்கொண் டிருந்தது. அவள்மிக அழகுள்ளவளாயும், அன்புடையவளாயும் இருந்ததால் அவள் என்னைத் தன் மார்புறத் தழுவிக்கொண்டு உச்சிமோந்து முத்த மிட்டபோதெல்லாம் எனக்குச் சந்தோஷமாகவே இருந்தது. இந்தத் தடவை அவள் என்னைச் சில மணி நேரங்கள்வரை தன்னுடன் வைத்துக்கொண்டிருந்தாள். அன்றுமாலை என்னை அங்கு அழைத்து வந்த கனவான் மறுபடியும் வந்து அங்கிருந்து அழைத்துச் செல்ல முயன்ருர். என்னை விட்டுப் பிரிய நேர்ந்தபோது அம்மாது அதிக துக்கப்பட்டாள். அவள் 'ஐயோ, குழந்தாய்! உன்னை நான் மறுபடியும் பார்ப்பது அரிது' என்று பலமுறை சொன்னது என் ஞாபகத்திலிருக்கிறது, அவள் என் தலையிலிருந்து கொஞ்சம் மயிரைக் கத்தரித்து எடுத்துக்கொண்டு பலமுறை என்னைத் தழுவிக்கொண்டு முத்தமிட்டாள். பிறகு அக்கனவானுடன் புறப்பட்டேனென்ருலும் என் மனம் மிகவும் கஷ்டப்பட்டது. அதையறிந்த அப்பிரபு எனக்குத் தேறுதல் கூறினர். சிறிதுநேரம் அவ்வண்டியில் சென்றபின்னர் ஒரு ஓட்டலில் இறங்கி அன்று இரவு முழுதும் அங்கேயே தங்கினேம். மறுநாள் காலை மறுபடியும் வேருெரு வண்டியில் பிரயாணப்பட்டு வெகுதூரம் சென்றபின்னர் துறைமுக

நகர மொன்றுக்குப் போயச் சேர்ந்தோம். அங்கே தர்ம பாடசாலையில்தான் என் சகோதரி படித்துக்கொண் டிருந்தாள்.

அப்பாடசாலை ஒரு பணக்கார தம்பதிகளால் ஏற்படுத்தப்பட்டு அவர்கள் சொந்த செலவிலேயே நிர்வகித்து வரப்பட்டது. கனவான் பாடசாலைப் பிள்ளைகளை மேற்பார்வை பார்த்து வந்தார். அவரது மனைவி அப்பாடசாலைப் பெண்களைக் கவனித்து வந்தார். கல்வி மட்டுமன்றி ஆகாரமும் உடையும் கூட இலவசமாக அளிக்கப்பட்டது. அது ஏழை மாணவர் மாணவிகளுக்கென்றே ஸ்தாபிக்கப்பட்டது. பாடசாலையின் மாணவர்கள் விடுதியில் சேர்ப்பிக்கப்பட்டேன். என் சகோதரி பெண்கள் விடுதியில் இருந்தாள். அவளை நான் பார்த்து இரண்டு வருஷங்களாய்விட்டிருந்தன. அப்போது அவளுக்கு வயது பதினாறு. அவள் மிக அழகாக வளர்ச்சியடைந்திருந்தாள். பனிபாய் இறந்துபோனது அவளுக்குத் தெரியாதாகையால் நான் அச்செய்தியை அவளுக்குத் தெரிவித்ததும் அவளும் ஓவென்று அழுதாள்.

என்று அவன் கூறியபோது ராஜேஸ்வரி அவனிடம், அதுவரை பனிபாய் என்னும் அக்கிழவி உங்களுடைய நெருங்கிய பந்து என உன் சகோதரி நினைத்திருந்தாளோ' என்று கேட்க, மோகன சுந்தரம், 'ஆம்; அவள் அப்படித் தான் நினைத்திருந்தாள். பனிபாய் எங்கள் உறவினள் அல்ல என்று வேலைக்காரி சொன்னதை நான் என் சகோதரியிடம் தெரிவித்தபோது அவள் அளவிலா ஆச்சர்யமடைந்தாள். அதே பாடசாலையில் எனது சகோதரி அவளுக்கு இருபது வயதாகும் வரையில் அதாவது நான்கு வருஷகாலம் தங்கியிருந்தாள். ஆனால் கடைசி காலத்தில் அவள் அப்பாடசாலை உபாத்தியாயராக நியமிக்கப்பட்டதால் மாதந்தோறும்

தவறாமல் சம்பளமும் பெற்றாள். பிறகு அவள் இன்னும் உயர்ந்த சம்பளத்தில் வேறு தேசத்துக்கு மாற்றப்பட்டாள். அப்போது அவள் மிக்க துக்கத்துடன் என்னை விட்டுப் பிரிந்துபோனாள். பிறகு நான் எனக்குப் பதினாறு வயதாகும் வரை அப்பாடசாலையிலேயே இருந்தேன். நான் அங்கு இருந்தவரையில் ஒருவராவது என் பந்து என்று சொல்லிக் கொண்டு என்னை வந்து பார்த்ததில்லை. என் சகோதரி தவிர வேறு கண்பரும் எனக்கு இவ்வுலகில் கிடையாது, என்று விசனத்துடன் மெதுவான குரலில் சொல்லி முடித்தபோது ராஜேஸ்வரி அவனிடம் அனுதாபங்காட்டி, 'ஐயோ பாவம்! இப்படியும் உன் வாழ்க்கை இருந்ததா? நீ பாடசாலையில் இருந்தபோது உன்னைச் சௌகரியமாகவும், மரியாதையாக வும் நடத்தினார்களா என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

அப்போது மோகன சுந்தரம் மீண்டும் பின்வருமாறு கூறினான்:—என்னை அப்பாடசாலையில் சௌகரியமாகவே நடத்தினார்கள். ஆனால் அன்புடன் நடத்தவில்லை. அதாவது எனக்கு ஆகார விஷயத்திலும், உடை சம்பந்தமாகவும் வேண்டிய சௌகரியங்களை யளித்தார்கள். அதுமட்டு மன்றிக் கையில் செலவுக்கெனப் பணமும் கொடுத்துவந்தார்கள். ஆனால் அன்புடன் நட்பு முறையிலோ உறவின் முறையிலோ என்னுடன் பேசியவர் ஒருவருமில்லை. என் தனி வாழ்க்கையில் எனக்கு ஆறுதல் கூறியதில்லை. பதினாறுவது வயதில் ஒரு நாள் அப்பாடசாலை தலைமை ஆசிரியர் இனி நான் அவ்விடம் தங்கலாகாதென்றும், இரத்தினபுரிக்குச் செல்ல வேண்டுமென்றும் தெரிவித்தார். அப்போது நான் மறைவாக இருந்து என் விஷயங்களை யெல்லாம் கவனித்து வருபவர்கள் என் எதிர்கால சம்பந்தமாய் என்ன திட்டம் போடிருக்கிறார்கள் என்று வினவியதற்கு அவர் அதைப்பற்றி யொன்றும் கூறு

மல் நான் இரத்தினபுரிக்குச் சென்றால் எந்த ஓட்டலில் தங்க வேண்டுமோ அந்த ஓட்டலின் பெயரை ஒரு கடிதத்தில் குறித்துக் கொடுத்தார். என் பிரயாணச் செலவுக்கென சொற்ப தொகையும் கையில் கொடுத்துப் போய் வரும்படி சொல்லி யனுப்பி விட்டார்.

நானும் அன்று மாலையே புறப்பட்டு இரவு எட்டு மணிக்கு இரத்தினபுரி போய்ச் சேர்ந்து தலைமை ஆசிரியரால் குறிப்பிடப்பட்டிருந்த மாடர்ன் ஓட்டலில் தங்கி அன்றிரவைக் கழித்தேன். மறுநாட் காலை நான் விழித்துக்கொண்டு காலை ஆகாரம் அருந்தியதும் எனக்காகக் கிடைத்த கடிதத்தை எனக்குக் கொடுத்தார்கள். இரத்தினபுரி மன்னர் காரியாலயத்திலுள்ள தலைமை குமாஸ்தாவினிட மிருந்து அனுப்பப்பட்டது. அதில் எனக்கு அதே அரண்மனையில் அந்தப்புரத்திலுள்ள ராணியின் சேவகனாக நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதைக் கண்டதும் நான் சந்தோஷ மடைந்தேன். அரண்மனையில் ஏதேனும் ஒரு சிறு வேலையில் புகுந்து கொண்டாலும் மெதுவாக நல்ல அந்தஸ்துக்கு வந்து விடலாமென்று எண்ணினேன். ஆகவே நான் சந்தோஷத்துடன் பக்கிங்ஹாம் அரண்மனைக்குச் சென்றேன். ஆனால் நான அங்கு போய் அவ்வேலையில் சேர்ந்ததும் அது மிகவும் வேவலமான ஒரு தொழில் என்று என் புத்திக்குப் பட்டது. அந்த வேலையில் இருப்பதற்கு என் மனம் பிடிக்கவில்லை. ஆயினும் என் செய்வது? என் நிலைமைக்கு யார் ஜவாப்தாரி என்பது எனக்கே தெரியவில்லை. அவ்வேலையை விட்டுவிட்டால் மறுபடியும் வேலைக்கு யாரிடம் போய்க் கேட்பது? ஆகவே நான் அந்த வேலையையே திருப்தியுடனும் ஒழுங்காகவும் செய்து முடிப்பதெனத் தீர்மானித்து ஒழுங்காக நடந்து வந்தேன். ஆனால் இராக் காலங்

களில் எனக்குத் தூக்கம் வராது. பற்பல சிந்தனைகள் மனதில் தோன்றும். இவ்வளவு கேவலமான ஒரு தொழிலில் என்னை வைப்பதற்குப் பாடசாலைப் பையன்களுடன் ஏன் படிக்க வைத்திருக்க வேண்டும்? இவ்வளவு சௌகரியமாக வாழ்க்கையை நடத்தும் வகையில் வசதிகளை ஏன் அளித்திருக்க வேண்டும்? நான் குழந்தையாக இருக்கும்போது அடிக்கடி என்னைக்கண்டு என்னிடம் அன்பு காட்டிய ஒரு அழகியமாது ஏன் என்னை இந்தக் கேவலத் தொழிலினின்றும் காப்பாற்றலாகாது? என்பனபோன்ற பல எண்ணங்கள் தோன்றின. ஆனால் எனக்கு ஒன்றும் விளங்காமலேயே இருந்தது.

ஆனால் நான் அங்கிருக்கும்போது நேர்ந்த பற்பல சம்பவங்கள் என் குழந்தைப் பருவத்தில் நான் கண்ட பலவற்றை விளக்கிக்கொண்டே வந்தன. நான் அங்கு வேலையை ஒப்புக்கொண்ட மறுநாளே இரத்தினபுரியைச் சுற்றிலும் திரிந்து வேடிக்கை பார்த்துவிட்டு வரலாமென்று அந்த அரண்மனையை விட்டு இறங்கிக் கீழே வந்தபோது அதே அரண்மனையைச் சேர்ந்த மற்றொரு கட்டடம் நான் சுமார் ஒன்பது வருஷங்களுக்கு முன் பனிபாயால் அழைத்து வரப்பட்ட கடிகார கோபுரத்தையுடைய கட்டடம் அதுதான் என்று என்று புத்தியிற்பட்டது. ஆகவே அவ்வழியே சென்ற ஒருவரைக்கண்டு என்ன கட்டடம் என்று கேட்டேன். அவர் அது மன்னரைச் சேர்ந்த ஒரு மாளிகை என்று கூறி விட்டுச் சென்றார். நான் புதிதாக வந்தவனாதலால் அறியாமல் கேட்பதாகத் தெரிந்துகொண்டு அவர் போய் விட்டார். ஆனால் என் மனம் முழுதும் அம்மாளிகை மீதே சென்றதால் நான் திக்பிரமையுடன் நின்றேன். பல வருஷங்களுக்கு முன் என்னை அம்மாளிகையில் சந்தித்து முத்தமிட்டு அன்பு

வார்த்தைகள் கூறி உபசரித்த அம்மாது மன்னரைச் சேர்ந்த இம்மாளிகையில் வசிப்பதாயின் அவளும் அரண் மனையைச் சேர்ந்தவளாகவே இருக்கவேண்டு மல்லலா? அப் படியிருந்தால் ராணியின் மனையில் என்னைச் சந்திக்க சமயம் ஏற்படுமே என்று நினைத்து ஒருகால் அம்மாது இறந்து விட்டாளோ என்று கருதியபோதுதான் துக்கம் அதிகரித்து விட்டது. நான் இப்படி யெல்லாம் பலவிதமாகச் சிந்தித்த வண்ணம் நிற்பதைப் பலரும் அறிந்து அதனையே கூர்ந்து கவனித்ததால் நான் அங்கிருந்து விலகிச் சென்றேன். ஆனால் அதே கட்டடத்தில் நான் என் தாயாக இருக்கலாமோ என்று நினைத்த அம்மாதைப் பல வருஷங்களுக்கு முன் கண்டேன் என்பது மட்டும் எனக்கு நிச்சயமாயிற்று.

என்று கூறியபோது மோகன சுந்தரத்துக்கு ஒருவகை உணர்ச்சி ததும்பியதால் அவன் மேற்கொண்டு பேச முடியாமல் சிறிது நேரம் மௌனமாக நின்றான். அப்போது ராஜேஸ்வரி அவனது கழுத்தில் கையைப் போட்டு அவனைக் குனியச் செய்து அவனது அழகிய முகத்தில் பல முத்தங் களைத் தந்து அவனுடைய வரலாற்றை முழுதும் விவரிக்கும் படி கூறினாள். அவனும் பின்வருமாறு கூறலானான். நான் மேலே கூறிய விஷயம் முடிந்த ஒரு வாரத்துக்குப் பிறகு ராணியார், அரண்மனையைச் சேர்ந்த நான் முன்பு கண்ட அதே கட்டடத்தில் ஒரு விருந்து நடத்தினர். அதற்காக நான் அங்கு செல்ல நேரிட்டது. சரி, கட்டடத்தில் போனால் என் சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொண்டு விடலாமென நினைத்து ஆவலுடன் அங்குச் சென்றேன். ஆ! என்ன ஆச் சர்யம்; நான் ஒன்பது வருஷங்களுக்கு முன் கண்ட அதே கட்டடம். அதே ஆட்கள். விலையுயர்ந்த ஆடைகள் அணிந்து கொண்டு மார்பின்மீது நட்சத்திரக்குறி அணிந்திருந்த கன

வானையும் கண்டேன். ஏன்? அம்மாளிகையிலிருந்த அறையில் சென்றதும் முன்பு நான் கண்ட இரத்தினபுரி மன்னர்களின் படங்களையெல்லாம் கண்டேன். அது மட்டுமா? முன்னர் நான் கண்ட, என்னை அன்புடன் தழுவிக்கொண்ட அதே மாது விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டு அங்கொரு சோபாவின் மீது வீற்றிருக்கக் கண்டேன். ஆ! அப்போது என் மனத்தில் பலவித சிந்தனைகள் தோன்றலாயின, கண்களில் நீர் கலங்கிற்று. அதனால் கண்ணும் தெரியவில்லை. அம்மாது என் தாயாரோ என்று நினைத்தேன். ஆனால் இம்முறை என்னை அம்மாது லட்சியம் செய்யவில்லை. ஒருகால் நான் அவள் இரகசிய சம்பந்தத்தால் பிறந்தவனோ என்னும் அச்சம் மேலிட்டது. தூக்கம் பொங்கிற்று.

என்று கூறியபோது உண்மையிலேயே துக்கம் அதிகரித்ததால் மோகனசுந்தரம், தான் தன்னைக் காதலிக்கும் பிரபு குலப் பெண்ணாகிய ராஜேஸ்வரியின் எதிரில் நிற்பதையும் மறந்து விம்மி விம்மி அழ ஆரம்பித்தான். தன் காதலன் அழுவதைக்கண்ட ராஜேஸ்வரி மனம் சகியாமல் அவனைத் தட்டிக்கொடுத்துப் பல தேறுதல் வார்த்தைகளைக் கூறித்தான் காதலித்ததில் தோஷ மொன்றுமில்லையென்று சொல்லும்படியாக மோகனசுந்தரத்தின் அந்தஸ்தும் உயரியதாகவே இருக்குமென்று தெரிவதாகச் சொல்லி இன்னும் முழுதையும் நிதானமாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டாள். அதனால் அவனும் ஆறுதல் அடைந்து மேலும் கூறியதாவது:-

அம்மாது சாதாரணமானவளல்லவென்று அவளைச் சுற்றிலுமிருந்த பல மாதர்கள் அவளை மரியாதையாக நடத்தியதால் தெரிந்தது. அந்தக் கனவான் அவளுடன் எப்படிச் சம்பந்தப்பட்டவர் என்பது தெரியவில்லை. பின்னர் ராணியின்

அரண்மனைக்கு எவ்வளவோ உயர்ந்த அந்தஸ்துள்ள மாதர்கள் வந்தார்களென்றாலும், என் மனதில் எப்பொழுதும் அமைந்திருந்த உருவத்தையுடைய அந்தக் குறிப்பிட்ட மாது அங்கு வரவே யில்லை.

என்று சொன்னபோது ராஜேஸ்வரி அவனைப்பார்த்து 'இப்போது நீ அவளைப்பார்த்தால் அடையாளங்கண்டு கொள்வாயா?' என்று கேட்டதற்கு அவனும், நான் இப்பால் இரண்டொருமுறை பார்த்ததுடன் நின்று விட்டிருந்தாலும் அவளை நான் மறந்திருக்க மாட்டேன். நான் சிறு வயதில் அவளை முதல் முறை பார்த்தபோதே எனக்கு அவளிடம் ஒருவிதமான பிரேமையும், அன்பும் ஏற்பட்டு விட்டதால் அவளுடைய உருவமே என் மனதில் அப்படியே பதிந்து விட்டது' என்று கூறியபோது ராஜேஸ்வரி, அதிக ஆர்வத்துடன், 'ஆ! நீ கூறுவதைக் கேட்க எவ்வளவு ஆனந்தமாயிருக்கிறது தெரியுமா? என்னுடைய உருவமும் உன் மனதில் இவ்வாறே பதிந்து விடுமா என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். எனக்கு நீ காதலன். உனக்கு நான் காதலி. நாம் இருவரும் இனி ஒருவரை யொருவர் மறக்க முடியாது' என்று சொன்னதும் மோகனசுந்தரமும் அவளுடைய மோகத்தில் ஈடுபட்டுத்தான் செய்வதே இன்னதென்று தெரியாதவனாய், அவள் வாய்திறந்து கேட்காம லிருந்தபோதே அவனாக அவளுக்குப் பல முத்தங்களைக் கொடுத்தான். அதைக்கண்ட அவள், அவன் அவ்வளவு தூரம் துணிந்து விட்டதற்காகச் சந்தோஷ மடைந்து அவனை இறுகத் தழுவிக்கொண்டாள். பிறகு பரஸ்பரம் இருவரும் முத்தமிட்டுக்கொண்ட பின்னர் மோகனசுந்தரம் தன் வரலாற்றைத் தொடர்ந்து கூறியதாவது:—

நான் குறிப்பிட்ட மாதை பிறகு பல மாதங்கள் வரை

யிலும் பார்க்க முடியாமற் போனதால் அவனை நான் சந்திக்க முடியுமா என்னும் எண்ணமே என் மனதினின்றும் மறைந்து விட்டது. ஆனால் ஒருநாள்; இரத்தினபுரி மன்னர் அரண்மனையில், நான் என் வரலாற்றில் அடிக்கடி பிரஸ்தாபித்த, மார்பு ஆடையின் மீது நட்சத்திரக் குறியை அணியும் அப் பிரபுவைக் கண்டேன். உடனே அவர் எதிரில் போய் நின்று ஏதேனும் அவருடன் பேசவேண்டுமென்னும் ஆவல் அதிகரித்தது. ஆகவே நான் அவர் எதிரில் நின்று, ஐயா, பிரபுவே! நான் மோகனசுந்தரம்!' என்று தெரிவித்தேன். அதற்கு அவர் ஒன்றும் அறியாதவரைப்போல் நிதானமாக, 'அப்பா! சரிதான். மோகனசுந்தரம் என்பது யார்?' என்று கேட்டதும் எனக்கு அளவிலா ஆச்சர்யமும் ஆத்திரமும் அதிகரித்து விட்டது. ஒருகால் நான் தவறுதலாக அவரை எனக்குத் தெரிந்த பிரபு எனக் கருதி விட்டேனோ என நினைத்தேன். ஆனால் நன்றாக அவரைக் கூர்ந்து நோக்கியதும் அவரே என்று நிச்சயமாகத் தெரிந்ததால் மீண்டும் தைரியத்துடனும், சிறிது கோபத்துடனும், 'பிரபுவே! பணிபாய் என்னும் மாது இறந்து போனதும் அக்குடிசையினின்றும் நீங்கள் என்னை இரத்தினபுரியிலுள்ள ஒரு மாளிகைக்கு அழைத்து வரவில்லையா? பிறகு என்னைத் துறைமுகப் பட்டணமொன்றில் ஒரு பாடசாலையில் சௌகரியமாகப் படிக்க ஏற்பாடு செய்யவில்லையா? அவ்வளவு ஏன்? இப்போது நான் இருக்கும் வேலையும் உங்கள் தயவினால்தான் கிடைத்தது என்று நம்புகிறேன்' எனக் கூறினேன்.

அப்போதும் அவர் சிறிதும் விட்டுக் கொடுக்காதவராய், விஷயமொன்மையுமே அறியாதவர்போல், 'அப்பா! நீ ஏதோ மயக்கமடைந்தவன்போல் பல விஷயங்களைக் கூறுகின்றாய். எனக்கு அவைகள் ஒன்றுமே தெரியாது. மேலும்

நீ கூறும் விஷயங்கள் இரகசியமாய் இருப்பதால் அதைப் பற்றி நான் விசாரிக்கவும் முடியாது. நீ ஏதோ தவறுதலாகக் கேட்டு விட்டபடியால் நான் உன்மீது கோபித்துக் கொள்ளப் போவதில்லை. அதற்குப் பதிலாக ஒன்று சொல்கிறேன். உனக்கு எப்போதாவது நல்ல சினேகிதரின் உதவி வேண்டுமாயின் சிறிதும் கூச்சமின்றி எனக்கு எதையும் கேட்கலாம், என்னாலானதை உனக்குச் செய்வேன்' என்று சொன்னதும் நான் அதிக பரபரப்புடன், 'பிரபுவே! ஒன்றுமறியாதவரைப்போல் பாவனை செய்து என்னைத் துயரத்தில் ஆழ்த்த வேண்டாம். என் மனம் சதா காண விரும்பும் அம் மாது யார்! அவள் எங்கே இருக்கிறாள்' என்று ஆவலுடன் கேட்டேன். அதற்கு அவர், 'அப்பா! இம்மாதிரி யெல்லாம் என்னைக் கேட்கவேண்டாம். எனக்கொன்றும் தெரியாது, ஆயினும் நீ அவ்வளவு தூரம் கேட்டதால் உனக்கு உற்ற துணைவனாக இருந்து ஏதேனும் உதவி செய்யத் தடையில்லை' என்று கூறியதும் ஒரு நிமிஷமும் அங்கே நிற்காமல் அவ்விடத்தை விட்டுச் சென்றார். ஆனால் அதேசமயத்தில் அங்குவந்த, நீண்டகாலமாக அரண்மனையில் வேலை செய்தும், பலவையும் அறிந்துகொண்டும், அநுபவம் அடைந்திருந்தவனான சேவகன் ஒருவனை அப் பிரபு யார்? என்று விசாரித்ததில், அவன் அவரது பெயர் பஞ்சாதம் பிரபு என்று சொன்னான்.

என்று அவன் கூறிமுடித்ததும் ராஜேஸ்வரி, 'ஆ, அப்படியா? பஞ்சகதம் பிரபுவா? என் தகப்பனாரின் டிரஸ்டியா? என் சகோதரனின் கார்டியனா? என் தாயாரின் அந்தரங்க நண்பரா? அவர்தான் உன்னை இங்கு வேலைக்கு வைத்துக் கொள்ளும்படி என் தாயாரிடம் சிபார்சு செய்தவர். இருக்கட்டும். மற்ற உன் வரலாற்றைக் கூறு' என்று சொன்னாள்.

மோகனசுந்தரம் மேலும் கூறியதாவது:—அந்த பஞ்சநதம் பிரபுவைத்தான் நான் என் சிறு பிராயத்தில் கண்டேன் என்பதை நிச்சயமாகக் கூறுவேன். அவர் எவ்வளவுதான் மறுத்தாலும் அதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. அவருக்கும் நான் எனது தாய் என நினைத்த அம்மாதுக்கும் என்ன சம்பந்தமோ தெரியவில்லை. அவர் அம்மாதின் சினேகிதரோ அல்லது பந்துவோ என்பதும் விளங்கவில்லை. இம்மாதிரி நானே பல கேள்விகளை எனக்குள் கேட்டுக்கொண்டேன். இதையெல்லாம் விவரமாக அறிவிப்பவர் ஒருவரும் இல்லை. இதையே அதிகமாகப் பேசிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. மற்றொரு விஷயம் சொல்லுகிறேன்; கேள். நான் பஞ்சநதம் பிரபுவைச் சந்தித்த ஒருவாரத்துக்குப் பின் ஒருநாள் மகாராணி தனது மாளிகையில் ஒரு பெரிய விருந்து வைத்தாள். அதற்குச் சுமார் ஆயிரம் விருந்தினர்கள் வந்திருந்தனர். அப்போது இரத்தினபுரியிலுள்ள பணக்கார மாதர்களெல்லாம் அதற்கு வந்தனர். அவர்கள் மாளிகையின் முன் வந்திறங்கியதும் விருந்து மண்டபத்துக்குச் செல்வதற்குமுன் வேறொரு அறையில் தங்கி யிருக்கவேண்டியிருந்தது. அந்த முதல் அறைக்குச் செல்லும் வழியில் நின்று வருபவர்களை யெல்லாம் மரியாதையாக வரவேற்பதே எனது வேலையாக ஏற்படுத்தப்பட்டது. நான் என் வேலையைக் கவனித்துக்கொண் டிருந்தபோது பல பணக்கார மாதர்களும், பிரபுகுலப் பெண்மணிகளும் வந்தார்கள். பிறகு நீண்டநேரம் கழித்த பின்னர் இரு மாதர்கள் விலை யுயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டு டாம்பீகமாக அங்கு வந்தார்கள். ஒருத்திக்கு முப்பத்திரண்டு வயதும், மற்றொருத்திக்கு முப்பது வயதும் இருக்கும். அவர்களுடைய முகத்தோற்றத்தால் அவர்களிருவரும் சகோதரிகளல்ல

என்று தெரிந்தது. அவர்களிருவரும் என் சமீபத்தில் நெருங்கியதும், ஆ! அவர்கள் முன்பு என் தாயென நான் கருதிய அம்மாது வியாதியுடன் படுத்திருந்தபோது அப் படுக்கையின் அருகில் உட்கார்ந்திருந்த இருமாதர்களே அவர்கள் என்பதை உணர்ந்தேன். அவர்களைக் கண்டு பல வருஷங்களாய்விட்டன என்றாலும் அவர்களை நான் மறக்க வில்லை. இவ்விஷயத்தில் என் ஞாபகத்தில் சிறிதும் மறதி ஏற்படவில்லை. பஞ்சநதம் பிரபுவைக் கண்டதும் எப்படி அவர் முன்னேபோய் நின்று அவருடன் பேசவேண்டுமென் னும் அடக்கமுடியாத ஆசை எனக்கு உண்டாயிற்றோ அவ் வாறே இப்போதும் தூண்டுதல் ஏற்பட்டதால் நான் அவ் விரு மாதர்களின் எதிரில் போய் நின்றேன். அப்போது அவர்களிருவரும் திடுக்கிட்டு என்னைப் பார்த்ததும் நான் இன்னவனென்று தெரிந்துகொண்டார்கள். ஆனால் அவர் கள் சமாளித்துக்கொண்டு ஒன்றும் தெரியாதவர்களைப்போல், 'இதில் ஏதோ தவறு ஏற்பட்டிருக்கிறது' என்று சொல்லிக் கொண்டே போனார்கள். அவர்கள் போனதும் எனக்குத் துக்கம் அதிகரித்துவிட்டது. அங்கிருந்த ஒரு நாற்காலியின் மீது உட்கார்ந்துகொண்டு கண்ணீர்விட்டு அழுதேன். என் தாயார் என நான் கருதும் அம்மாளைப் பற்றிய விவரத்தை நன்றாக அறிவிக்கக் கூடியவர்களெல்லாம் ஒரே பிடிவாத மாய் சிறு செய்தியையும் வெளியில் விடாமலிருக்கிறார்களே என்னும் கவலைதான் எனக்கு அதிகமாய்விட்டது. நான் இவ்வாறு துக்கத்துடன் உட்கார்ந்திருக்கும்போது மற்றும் பல பெண்மணிகள் அவ்வழியே வந்ததால் நான் கண்ணீ ரைத் துடைத்துக்கொண்டு இத்தகைய சம்பவம் ஒன்றுமே நடைபெறாததுபோல் அந்த வாயிலில் நின்றுகொண்டு அவர் களை வரவேற்றேன். விருந்து முடிந்த பிறகு நான் குறிப்

பிட்ட இருமாதர்கள் இவ்வழியே வந்தால் அவர்களைப்பற்றி ஏதேனும் விசாரிக்க வேண்டுமென்று நினைத்தேன். ஆயினும் விருந்து முடிந்தபின்னர் அவர்களிருவரும் வேறுவழியாகச் சென்றுவிட்டார்கள். அதன் பிறகு நான் அம்மாதர்களை இதுவரையும் கண்டதே யில்லை.

என்று மோகனசுந்தரம் கூறிமுடித்ததும், ராஜேஸ்வரி அவனைப் பார்த்து, 'அம்மாதர்கள் பிறகு ராணியின் மாளிகைக்கு வரவில்லையா?' என்று கேட்டாள். அதற்கு அவன் 'அதைப்பற்றி என்னால் ஒன்றும் சொல்ல முடியாது. ஏனெனின், அச்சம்பவம் நடந்த சில தினங்களுக்குப் பிறகு ராணியின் வேலைக்காரர்களில் சிலரை எடுத்துவிடுவதால் நானும் வேலையினின்றும் விலகிவிட வேண்டுமென்றும், நான் எத்தகைய குற்றமும் செய்யாமல் அதிகாரிகள் திருப்தி யடையும்படி வேலை செய்ததால் மூன்று மாத சம்பளம் கையில் மொத்தமாகக் கொடுத்து அனுப்பப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆயினும் என்னை விலக்குவதற்கு அதுதான் காரணமா என்பதில் எனக்கு சந்தேகமாகவே இருந்தது. நான் அங்கு இருந்ததில் பல பேர்களுக்குக் கஷ்டமாய் இருந்ததால் என்னை விலக்கிவிட முயன்றார்களோ என்று கருதினேன். எப்படியாயினும் நான் அங்கிருந்து விலகவேண்டிய காலம் வந்துவிட்டது. அவர்களும் எனக்கு மூன்றுமாத சம்பளமும், நல்ல நற்சாட்சிப் பத்திரங்களும் கொடுத்து அனுப்பிவிட்டார்கள். நானும் அங்கிருந்து விலகிவிட்டேன்' என்று தெரிவித்தான்.

அப்போது ராஜேஸ்வரி, 'எனதன்புள்ள மோகன சுந்தரம்! உனக்கு பஞ்சநதம் பிரபு செய்த வாக்குறுதியை ஞாபகப்படுத்திக்கொண்டு அவரது உதவியைப் பெற்றிருக்கலாகாதா?' என்று கேட்டாள். அதற்கு அவன் பின்வரு

மாறு கூறினான்:—ஆம்; ஞாபகப்படுத்திக் கொண்டேன். உடனே அவரைக் காண்பதற்காக அவாது மாளிகைக்குச் சென்றேன். நான் வந்திருப்பதாக அறிந்ததும் அவர் என்னை மிக்க விசுவாசத்துடன் வாவேற்றார். நான் வேலையி னின்றும் விலக்கப்பட்டுவிட்டதை அவருக்கு அறிவித்தேன், அப்போது அவர் ஆச்சர்யப் படுபவர்போல் பாவனை செய் தார். நான் அவர் காலில் விழுந்து என் மனதிலுள்ள சந் தேகங்களைப் போக்கும்படி மன்றாடிக் கேட்டுக்கொண்டேன். ஆயினும் அவர் தன் பிடிவாதத்தில் சிறிதும் விட்டுக்கொடுக்க வில்லை. அவருக்கு இவ்விஷயமாக எதுவும் தெரியாதென் றும், நான் ஏதோ தவறுதலாக அறிந்துகொண்டு அவரைக் கேட்பதாகவும் சொல்லி என்னிடம் வேண்டிய அளவு அனு தாபம் காட்டுவதாகவும் வேறு வேலையில் என்னை வைப்பதாக வும் தெரிவித்தார். அப்போது உன் தாயாராகிய ஹேமவதி சீமாட்டிக்கு ஒரு ஆள் தேவை என்று தெரிந்ததால் அவர் ஒரு சிபார்சுக் கடிதம் கொடுத்தார். அதைக்கொண்டு வந்து உன் தாயாரிடம் காண்பித்து இவ்வேலையில் அமர்ந்தேன். பிறகு எனக்கு ஒரு விஷயமும் தெரியாது.

என்று அவன் கூறி முடித்ததும் அவனுக்குத் துக்கம் அதிகரித்துவிட்டதால் மௌனமாக இருந்து பெரு மூச்சு விட்டு அழுதான். அப்போது அவனிடம் உண்மைக் காதல் கொண்ட ராஜேஸ்வரி அவன் அழுவதைக்கண்டு மனந்தாளா மல் அவனை மார்புறத் தழுவிக்கொண்டு பல தேறுதல் வார் த்தைகளைக் கூறினாள். பிறகு அவள் அவனிடம் 'அன்புள்ள மோகனம்! நீ கூறியதிலிருந்து உன் சகோதரியைப்பற்றி உனக்கு ஒன்றுமே தெரியாதென்று தோன்றுகிறதே. உனக் காக எனக்கு அவள் விஷயத்திலும் அபிமானமும் அனுதாப மும் ஏற்பட்டிருக்கிறது' என்று கூறவும் அவன், 'அவள்

சுமார் இருபது வயதுடையவளாக இருக்கும்போது அதா வது ஆறுவருஷங்களுக்கு முன்னரே ஒரு பெரிய குடும்பத் தின் நிர்வாகியாக அமர்ந்து இதாதேசம் போய்விட்டாள் என்று சொன்னேனல்லவா? அவள் அங்குச் சென்ற பிறகும் சொற்பகாலம்வரை அடிக்கடி கடிதங்கள் எழுதியதுடன் சிற் சில சமயங்களில் சில சன்மானங்களையும் அனுப்பி வந்தாள். ஆனால் இரண்டு வருஷங்களுக்குப்பிறகு அவள் கடிதம் எழுதுவதையும் நிறுத்திவிட்டதால் இந்த நான்கு வருஷங் களாக எனக்கு அவளைப்பற்றி ஒன்றுமே தெரியாது.' என்று கூறிக்கொண்டிருந்தபோது அவர்களிருவரும் தனியே உல் லாசமாய் இருந்த அவ்வறையை நோக்கி யாரோ வரும் கால டிச் சப்தம் கேட்டதால் ராஜேஸ்வரி பரபரப்புடன், 'யாரோ வருவது போல் தெரிகிறது. ஒன்றும் பேசவேண்டாம்' என் றாள். என்று கூறிக்கொண்டே அவள் மிக்க அன்பான முறையில் ஒருமுறை அவனது கையைப்பிடித்து அழுத்தி விட்டு அன்பும் காதலும் நிறைந்த பார்வையை அவன் மீது வீசிய பின்னர் ஒன்றுமறியாதவள் போல் அவன் கொண்டு வந்து கொடுத்த பத்திரிகையைப் படிப்பவளே போல் பாவனை செய்யலானாள். மோகனசுந்தரமும் அப்போதுதான் பத்திரி கையைக் கொண்டுவந்து ராஜேஸ்வரியினிடம் கொடுத்துவிட் டுச் செல்பவனேபோல் அறையைவிட்டுச் செல்ல அவ்வறை யின் கதவினிடம் சென்றபோது ராஜேஸ்வரியின் சகோதரி யான கற்பகம் மிக அழகாக அலங்கரித்துக்கொண்டு புன் சிரிப்புடன் அவ்வறையில் நுழைந்தாள். அவள் மோகன சுந்தரத்தின் முகத்தைக் கண்டதுமே தன் தமக்கை இது வரை அவனுடன் காதல் சம்பந்தமான பல விஷயங்களைப் பேசி யிருக்கவேண்டும் என்று நிச்சயித்தாள். மோகனசுந் தரம் அறையின் கதவைச் சாத்திக்கொண்டு வெளியே சென்

தும் கற்பகம் தன் தமக்கை ராஜேஸ்வரியிடம் வேடிக்கையாக, 'இப்போது நீ மிக்க சந்தோஷமாக இருப்பாய் என்று நம்புகிறேன்' என்று கூறினாள்.

அப்போது ராஜேஸ்வரி தன் மனமார்ந்த காதலனுடன் நீண்டநேரம் பேசிக் கொண்டிருந்த சந்தோஷத்தில் மூழ்கி இருந்தபடியால் தன் தங்கையைத் தழுவிக்கொண்டு, 'ஆம், மிக்க சந்தோஷமாகத்தான் இருக்கின்றேன். நான் மனமார மோகனசுந்தரத்தை நேசிப்பதை அவனிடம் தெரிவித்துவிட்டேன். அவனும் என்னை நேசிப்பதாக ஒப்புக்கொண்டு விட்டான். அவன் மிக்க கூர்மையான அறிவுடையவன் என்று நான் கூறுவதை நீ நம்புவாயோ இல்லையோ தெரியவில்லை. மேலும் அவன் தன் சரித்திரத்தை என்னிடம் விவரமாகக் கூறினன். அது மிக்க ஆச்சர்யமானதாகவும், மர்மங்கள் நிறைந்ததாகவும் இருக்கிறது. அதனாலும் எனக்கு அவனிடம் அதிக அபிமானமும் அன்பும் ஏற்பட்டுவிட்டது. ஆனால் இதையெல்லாம் மற்றொரு சமயம் உன்னிடம் விவரமாகக் கூறுவேன்' என்று அவள் சொல்லி முடிப்பதற்குள் அவ்வறையின் கதவு திறக்கப்பட்டு அப்பெண்களின் சௌகரியத்தைக் கவனிக்கும் வேலைக்காரி அங்கே வந்தாள்.

அவளைக் கண்டதும் அவள் முகக்குறியிலிருந்தே விஷயத்தை ஒருவாறு உணர்ந்த கற்பகம், 'அவர் வந்திருக்கிறாரா?' என்று ஆவலுடன் கேட்டாள். உடனே அவளும் புன்சிரிப்புடன், 'ஆம்; துளசிங்கம் பிரபு தோட்டத்தில் வந்து காத்துக்கொண்டு உன்னை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்' என்று சொன்னதும், கற்பகம், 'அப்படியானால் நான் உடனே அவ்விடம் செல்கின்றேன். வேலைக்காரி! நீயும் என் தமக்கையும் ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொண்டிருங்கள்' என்று சொன்னாள். அப்போது ராஜேஸ்வரியும்,

'தங்காய்! பயப்படவேண்டாம். யாரும் அங்கு வாராதபடி நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்' என்று கூறினாள்.

பிறகு கற்பகம் அவ்வறையை விட்டுச் சென்று பின் புறப் படிக்கட்டுகளின் வழியே இறங்கித் தோட்டத்திற்குச் சென்று சற்றுநேரத்துக்குள் ஒரு மூலையில் பதுங்கியிருந்த அவளுடைய காதலன் துளசிங்கம் பிரபுவைச் சந்தித்து இருவரும் பரஸ்பரம் ஆலிங்கனம் செய்துகொண்டனர்.

இதில் பிரபுகுலப் பெண்ணாகிய ராஜேஸ்வரி, தன் மாளிகையிலேயே சேவகனாக இருக்கும் மோகனசுந்தரத்தைக் காதலித்ததில் பலரும் ஆச்சர்யப்படக் கூடும். ஆயினும் உண்மைக் காதலுக்கு ஜாதி மத வேற்றுமைகளும், அந்தஸ்து வேற்றுமையும் தோன்றாது. ஒரு ஆத்மாவை மற்றொரு ஆத்மா மனமாரக் காதலிப்பதால் அத்தகைய வித்தியாசங்கள் உண்மைக்காதலுக்கு இருப்பதற்கு நியாயமில்லை. ஆகவே காதல் விவாகம் என்பது பெரும்பாலும் கலப்பு மணமாகவே நேரிடுவதுண்டு. எனினும் இக்காலத்தில் காதல் விவாகம் என்று நம்மிடையேயும் பலர் கூறி நடத்தி வருவது உண்மைக்காதல் விவாகமா என்பது சந்தேகமாகவே இருக்கிறது. அதைக் காமத்தால் ஏற்பட்ட பலனே எனக் கூறுதல் பொருந்தும். காதலால் கட்டுண்டவர் பிறகு எக்காரணத்தைக்கொண்டும் பிரியவேமாட்டார்கள். விவாகத்து என்பது அதற்கு அவசியமில்லை. ஆகவே விவாக முறையில் கண்டபடி சீர்திருத்தம் செய்வதென்பதும் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல. நம் சமூகத்தில் காணப்படும் விவாகமுறையைத் தீர்க்காலோசனையின்மீது மதக் கட்டுப்பாட்டிலும், ஒழுக்கத்திலும், தீர்க்க தரிசனத்திலும் சிறந்த அறிஞர்கள் சீர்திருத்தம் கொண்டுவர முயல்வதே சிறப்பானதாகும்.

29-வது அத்தியாயம்

—:o:—

வேலைக்காரியும் ரகசிய சந்திப்பும்

ஹேமவதி சீமாட்டியின் இரு குமாரிகளான ராஜேஸ்வரி, கற்பகம் ஆகிய இருவரின் சௌகரியங்களைக் கவனித்து வருபவளும், கற்பகத்தின் காதல் விஷயத்தை அறிந்தவளுமான வேலைக்காரியின் பெயர் பார்வதி. அவளுக்கு அப்போது வயது இருபத்து மூன்று அவள் மிக்க அழகானவளாயும், கூர்மையான புத்தியுடையவளாயும் இருந்தாள். அவள் தக்க பருவத்தை யடைந்திருந்த படியால் அவளுடைய அங்கங்களெல்லாம் பூரண வளர்ச்சியை யடைந்து கண்டோர் மனதைக் கவரும் தன்மையனவாய் இருந்தன. அவளுடைய பந்துபோன்ற ஸ்தனங்கள், அழகிய தோள், வசீகரத்தையுடைய தொடை முதலியன அவளது ஆடையால் மறைக்கப்பட் டிருந்தபோதிலும் அவளது ஸ்தனங்க ளிரண்டும் திரண்டு உருண்டு கொண்டிருந்ததால் கண்ணைக் கவரும் விதமாய் ஆடையின் மறைவில் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. அம்மாளிகைக்கு அடிக்கடி வரும் பல பிரபுகுலப் பெண்களும் அவளைக்கண்டு பொறாமை யடைந்ததுண்டு. பார்வதி வேலைக்காரியாதலால் எளிய உடைகளையே அணியவேண்டிய நிலைமையில் இருந்தாளென்றாலும் அவற்றைச் சுத்தமாகவும், நல்ல வர்ணங்களுடையதாகவும் வைத்துக்கொண்டிருந்தாள். சிரமப்பட்டுச் சேர்த்து அவசியமான இரண்டொரு நகைகளையும் அணிந்திருந்தாள். அவள் அடிக்கடி முகத்தை சோப் நீரால் கழுவிக்கொண்டதாலும், சுத்தமாக இருக்கவேண்டுமென்று ஆசையுடையவளாய் இருந்ததாலும் பலரும் அவளை விரும்பி

ளுர்கள். மேலும் அவளது நடை உடை பாவனையால் அவள் யாரோ ஒரு உயர்குலப் பெண்போல் தோன்றினளே யொழிய வேலைக்காரியைப்போல் காணப்படவில்லை. பார்வதி யின் எஜமானிகளான ராஜேஸ்வரியும், கற்பகமும் அவர்க ளுடைய மனதுக் குகந்த வேலைக்காரியான பார்வதிக்கு அடிக்கடி தங்கள் விலையுயர்ந்த ஆடைகள் சற்று பழைய தானதும் கொடுத்து வந்தார்கள். அவற்றை அவள் ஆவ லுடன் வாங்கிக்கொள்வாளே யொழிய அவற்றை அணிய மாட்டாள். அப்போதைக் கப்போது அவ்வாடைகளை அவள் வேறொரு மாதுக்கு விற்றுவிடுவது வழக்கம். இவ் வாறு விற்பதனால் கிடைக்கும் பணத்தையும், தன் சம்பளத் தையும் கொண்டு அவள் ஒழுங்கான வாழ்க்கையை அனுஷ் டித்து வந்தாள்.

பார்வதி எப்போதும் புன்சிரிப்புடன் கூடிய முகத்தின ளாயும், வேடிக்கையாகப் பேசும் சுபாவ முடையவளாயும் இருந்தாள். பல பிரபுகுலப் பெண்களின் மத்தியில் அவள் நின்றிருந்ததால் அவளையும் பிரபுகுலப் பெண் என்று நினைப் பார்களே யொழிய வேலைக்காரி என எவரும் கருதார். மேலும் அவள் பாவனையைப் பார்க்கும்போதே தன் எஜமானி களின் இரகசியத்தை அறிந்துகொண்டு அதற்கேற்றபடி நடப்பவள் என்பதையும் தெரிந்துகொண்டு விடலாம். ஆனால் ராஜேஸ்வரி அம்மாளிகையின் வேலைக்காரர்களில் ஒருவனை மோகனசுந்தரத்தினிடம் காதல்கொண் டிருப்பதுமட்டும் பார்வதிக்குத் தெரியாது. பார்வதியின் கண்கள் இரண்டும் அதிக சக்தியைப் பெற்றிருந்தன. அவள் தன் பார்வையை வீசியே எல்லாக் காரியங்களையும் சாதித்துக்கொள்ள வல்ல வள். ஆயினும் அடக்கத்தில் சிறந்தவளாக இருந்ததால் ஹேமவதி சீமாட்டியின்முன் பணிவுடனும் மரியாதையுட

னும் நடந்துகொள்வாள். அதனால் அச்சீமாட்டி பார்வதி மிகவும் நல்லவள் என்றே நம்பியிருந்தாள். ராஜேஸ்வரி, கற்பகம் ஆகியவர்களிடம் அவள் தாராளமாகவும், வேடிக்கையாகவும் நடந்துகொண்டு, அவர்களுடைய இரகசியத்தை யறிந்து அதற்கேற்றபடி நடப்பவளாக இருந்தாலும், எல்லை கடந்து அவர்களிடம் நெருங்கி விடாமலோ, அளவுக்குமீறிய வார்த்தைகளிலோ செய்கையிலோ ஈடுபடாமலோ சர்வ ஜாக்கிரதையுடன் நடந்துகொண்டாள். அவளுடைய நாசியும், வாயும் அழகாக அமைந்திருந்தன. அவளது அதரங்களோ பவழம்போல் சிவப்பாக இருந்ததுடன் மற்றொரு பாலாரிடமிருந்து அன்புகனிந்த முத்தங்களை எதிர் பார்ப்பவை போலவும், அப்படி முத்தம் கிடைத்தால் அவற்றைத் திருப்பிக் கொடுக்கக்கூடிய ஆர்வமுடையவை போலவும் துடித்துக்கொண டிருந்தன. பொதுவாக அவள் பிறரால் விரும்பத்தக்க குணங்களையும் நடையையும் உடையவளாக இருந்தாள்.

அவள் இவ்வளவு அழகுடையவளாகவும், யௌவனமுடையவளாகவும் இருந்ததால் பலர் அவளை மோகித்ததுண்டு. ஏன்? ஹேமவதி சீமாட்டியின் குமாரனும் காமப்பித்தனுமான தினகரம் பிரபுவும் அவளை மோகித்ததுண்டு. அவளும் அம்மாளிகைக்கு அடிக்கடி வரும் பல பிரபுக்களுடனும் மற்றும் உயர்ந்த அந்தஸ்துள்ள உத்தியோகஸ்தர்கள், வேலைக்காரர்கள் முதலியவர்களுடனும் தாராளமாகவும் வேடிக்கையாகவும் பேசுவாள். அவள் தன் வெண்மையான பற்களைக் காண்பித்தவண்ணம் சிரிப்புடன் அவ்வாலிபர்களுடன் பேசும் போது அவள் தங்கள் விருப்பத்துக்கு இணங்குவாளென ஆத்திரபுத்தியுடன் கருதி அவளிடம் தவறான வழியில் ஏதேனும் பேசினால் உடனே அவள் தக்கபடி கண்டித்து அவர்

களுடைய வாயை அடக்கிவிடுவாள். அவள் கற்பிற் சிறந்த பதிவிரதா சிரோமணியல்லவென்றாலும் எந்த ஆடவரிடமும் அளவு கடந்த முறையில் தவறான வழியில் நடந்துகொள்ள மாட்டாள். அவள் தனக்குத் தக்க ஒரு காதலனைத்தேடி மணந்துகொண்டு கௌரவமான வாழ்க்கையை நடத்தவேண்டுமென்னும் உயரிய நோக்கங்கொண்டவளாய் இருந்ததால் அவ்வாறு ஜாக்கிரதையுடன் நடந்துவந்தாள். அவள் தன் எஜமானியின் காதல் விஷயத்தில் சம்பந்தப்பட்டும், இரகசியக் கடிதங்களைக்கொண்டு சென்றும் இதர தவறான காரியங்களைப் பிறருக்காகச் செய்தும் வந்தாளே தவிர தான் மட்டும் குற்றமற்ற பரிசுத்தமானவளாகவே இருந்தாள்.

இப்படிப்பட்ட குணத்தையுடைய பார்வதி தன் எஜமானிகள் இருவரின் அந்தரங்கங்களையும் அறிந்து கொண்டிருந்ததுடன் முக்கியமாகக் கற்பகத்தின் காதல் விஷயத்தில் ஈடுபட்டும் அவளுக்கும் துளசிங்கம் பிரபுவுக்கும் இருந்த காதலில் உதவி செய்துகொண்டும் வந்தாள். ஆகவே இப்போது கற்பகமும் துளசிங்கம் பிரபுவும் தோட்டத்தின் ஒரு மூலையில் இரகசியமாகச் சந்தித்துக் காதல் சம்பந்தமான சம்பாஷணையில் ஈடுபட்டிருந்தால் எவரும் அங்கு வந்து விடாதபடி பார்வதி காவல் காத்துக்கொண்டிருந்தாள். அந்தத் தெருவிலிருந்த இதர மாளிகைகளைவிட ஹேமவதி சீமாட்டியின் இம்மாளிகையின் பின் புறத்தில் தான் பெரிய தோட்டமிருந்தது. அங்கு அடர்த்தியாக மரங்கள் வளர்ந்திருந்தபடியால் நெருங்கிப்பார்த்தாலொழிய தூரத்திலிருந்து பார்க்க முடியாதபடி பல இடங்கள் இருந்தன. அத்தகைய இடங்கள் காதலர்களின் சந்திப்புக்கு ஏற்றதாக இருந்தன. இதையெல்லாம் வாசிக்கும் நேயர்கள் கற்பகமும் அவளது காதலனை துளசிங்கம் பிரபுவும் ஏன் இன்னும் சௌகரியமான

வேறு எந்த இடத்திலாவது கூடிப்பேசலாகாதா என்று கேட்கலாம். ஆனால் அப்படிப்பட்ட பிரபுக்களின் குடும்பப் பெண்களுடைய வாழ்க்கை முறையை அறிந்தால் அவ்வாறு கேட்கக் காரணமிராது. பிரபு குலப்பெண்கள் தனியே வீட்டை விட்டு எங்கும்போக முடியாது. மாலைநேரங்களில் உலாவச் சென்றால் ஒரு வேலைக்காரன் பின்னாலேயே காவல் காத்துக் கொண்டே செல்வான். வண்டியில் எங்கேனும் பிரயாணம் செய்தாலும் வண்டியோட்டி, சேவகன் முதலியவர்களுக்குத் தெரியாமல் வண்டியை விட்டு நீண்ட நேரம் எங்கும் செல்ல முடியாது. ஏதேனும் சாமான் வாங்கச் சென்றாலும் அப்படிப்பட்ட இடங்களிலும் அவர்களுக்குத் தெரிந்த பல ஆடவரும் மாதரும் இருப்பார்களாதலால் காதல் சம்பந்தமான பேச்சுகளைப் பேச முடியாது. ஆகவே நிலைமைகளை எல்லாம் கண்டு யோசித்தே கற்பகம் தன் மாளிகையின் தோட்டத்திலேயே மறைவான ஒரு இடத்தில் தன் வேலைக்காரியின் உதவியால் தன் காதலனை இரகசியமாகச் சந்திப்பதே சௌகரியம் என்று யோசித்தே அவ்வாறு நடந்து கொண்டாள். அவள் அம்மறைவான இடத்தில் இருக்கும்போது அவள் ஓய்வு பெற்று நிம்மதியான மனதுடன் இருப்பதற்காகத் தனியே உட்கார்ந்திருக்கிறாளென நினைத்துச் சேவகர்கள் அவள் அங்கு இருப்பது பற்றிக் கவலை செலுத்தாமலே போய் விடுவார்கள். அத்தோட்டத்தைச் சுற்றிலும் போடப்பட்டுள்ள சுவற்றின் பின் புறத்தில் ஒரு சிறு கதவு இருந்தது. அதைத் திறந்து கொண்டுதான் தோட்டத்துள் நுழைய வேண்டும். பார்வதிதான் அக்கதவின் சாவியைக் கொண்டுவந்து கதவைத் திறப்பாள். சிற்சில சமயங்களில் அவள் சாவிகொண்டுவருவதற்குத் தாமதமாகுமாயின் அன்னிய தேசத்துப் பிரபுவாகிய துளசிங்கம் சுவர் ஏறிக் குதித்து உள்ளே வந்து விடுவான்.

இந்த துளசிங்கம் பிரபுவைப்பற்றி வாசகர்களுக்குச் சிறிது தெரிவிக்கவேண்டியது அவசியமாய் இருக்கிறது. அவனுக்கு வயது சுமார் இருபத்தெட்டு இருக்கும். மிக்க அழகானவனாய் இருப்பான். ஆனால் அவன் முகத்தில் சிறிது கவலைக்குறி தோன்றுமென்றாலும் அவனுடைய புன்சிரிப்பு அக் குறிகளையும் சிற்சில சமயங்களில் மாற்றிவிடும். அவன் உயரமானவனாயும், நல்ல தேகதிடமுள்ளவனாயும் இருப்பான். அவன் கண்கள் பெரிதாகவும், இனிய பார்வையுடன் கூடியதாயும் இருந்தன. அவன் காதல் சம்பந்தமான பேச்சுகளைப் பேசும்போது அதைக் கேட்பவரை அப்படியே தன் பக்கம் இழுத்துவிடக்கூடிய சக்தியுடன் பேசக்கூடியவன். அவன் அன்னிய தேசத்தானாயினும் அவன் தந்தை உயிருடன் இருக்கும்போதே இரத்தினபுரிக்கு வந்து விட்டவனாதலால் அவன் இரத்தினபுரி வாசியைப்போலவே நடை உடை பாவனைகளில் இருந்தான். கற்பகமும் துளசிங்கம் பிரபுவும் பரஸ்பரம் மனமாரக் காதலித்தவர்க ளாகையால் அவர்களுடைய சந்திப்பு மிக்க அன்பும் ஆர்வமும் நிரம்பியதாய் இருந்தது. பிரபு அவளைத் தன் மார்போ டணைத்துக்கொண்டு அவளுடன் காதல் சம்பந்தமான பல பேச்சுகளைப் பேசிக்கொண்டிருந்தான். அவளும் ஆர்வத்துடன் அவனது கழுத்தில் தொங்குவதுபோல் அவன் அணைப்பில் இருந்துகொண்டே அவன் பேசிய இனிய மொழிகளை யெல்லாம் ஆனந்தமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவள் மாலை உடையை அணிந்துகொண்டிருந்ததால் அச்சமயத்தில் மிக அழகாகக் காணப்பட்டாள். அவள் முடித்திருந்த பின்னல் அவள் தோள்மீது தொங்கிக்கொண்டிருந்தது. காதலர்கள் இருவரும் ஒருவரை யொருவர் ஆலிங்கனம் செய்துகொண்டே பின்வருமாறு பேசினர்.

துளசிங்கம்:—என தன்புள்ள கண்ணே! நாம் இன்னும் எவ்வளவு காலம் இப்படி இரகசியமாக மறைவான இடத்தில் சந்திப்பது? நாம் சந்திப்பதில் சந்தோஷமாகக் காலங் கழிக்கிருேமென்ருலும் இவ்வாறு திருட்டுத் தனமாகச் சந்திப்பது எங்கள் இருவருக்குமே அவமானமல்லவா ?

கற்பகம்:—நான் என்ன செய்ய வேண்டுமென்று நீர் விரும்புகிறீர்? என்னல் ஆகக்கூடியது என்ன இருக்கிறது? எனக்கு அந்த இரகசியக்கலியாணமென்பது பிடிக்கவில்லே.

துளசிங்கம்:— எனதன்புள்ள கற்பகம்! நான் சொல்வதைக் கவனமாகக்கேள். என் செல்வ நிலைமை எப்படிப்பட்டதென்பதை நான் உன்னிடம் மறைக்காமல் சொல்லியிருக்கிறேன். ஒருவர் சுகமாக வாழ்வதற்குத்தான் என் செல்வம் இடங்கொடுக்கும். இருவர் சேர்ந்துவிட்டால் வறுமையில் தான் கஷ்டப்பட நேரிடும். ஆனல் நான் என் தேசத்துக்குத் திரும்பிச் சென்ருல் எனக்கு நலல உத்தியோகம் கிடைக்கும். காலஞ்சென்ற என் தந்தையின் நண்பர்கள் பலர் பெரிய அதிகார பதவியில் இருக்கிருர்கள். அந்த உத்தியோகம் கிடைத்துவிடுமாயின் நான் உன்னை மிதமிஞ்சிய சௌக்கியத்தில் இல்லாவிட்டாலும் சாதாரண சௌகரியத்தில் வைக்க முடியுமாதலால் நீ என்னுடன் வந்து விடுவதற்குத் தடை என்ன இருக்கிறது சொல் பார்ப்போம்.

கற்பகம்:—மிதமிஞ்சிய சௌக்கியமா! உண்மைக் காதல் விஷயத்தில் அச் சொற்களைச் சொல்லவேண்டாம். ‘அன்புக்கு முன் சௌக்கியமும் சௌகரியமும் என்ன செய்யும்? ஸ்ரீராமருடன் காட்டிலும் வாழ்க்கையை நடத்த சீதை விரும்பவில்லையா ? இப்போது நான் இம்மாளிகையில் அளவில்லா சுகபோகங்களை அனுபவித்து அதில் சலிப்பையும் அடைந்துவிட்டிருக்கிறேன். உண்மைக் காதலுடன் தனித்து வாழ

விரும்பும் ஆன்மா இத்தகைய ஆடம்பரங்களையும், வீண் பெருமைகளையும், பல தவறான செயல்களையும் வெறுக்கின்றது. நான் உம்மைக் காதலிப்பதில் சுகபோகத்தை எதிர்பார்க்கவில்லை. வறுமையிலும் காலங்கழிப்பேன்.

ஆனால்,—

என்று அவள் பாதி சொல்லி முடித்ததும் அவளது முகத்தில் ஒருவித கவலைக்குறி தோன்றியதால் துளசிங்கம் பிரபு அப்பெண்ணின் அழகிய முகத்தை உற்று நோக்கிக் கொண்டே தன் கையை அவளது இடுப்பில் அணைத்துக் கொண்டு, 'எனதன்புள்ள பெண்ணே! நீ ஏதோ அச்சப்படுகிறாய்; ஏன் நிதானம்? என் அன்பில் உனக்கு நம்பிக்கையில்லையா? அல்லது உன் தாயார் அடிக்கடி என்னைப் பற்றிக் குறை கூறுவதை நீ கேட்டதால் அதன்படியே நான் உன்னால் நேசிக்கத்தக்க யோக்கியனல்ல என்று நினைக்கிறாயா? உண்மை என்ன? உடனே சொல்லிவிடு' என்று மிக ஆவலுடனும் பரபரப்புடனும் கேட்டான்.

அதற்குக் கற்பகம், தன் காதலன் அவ்வாறு கூறியதைக் கேட்டு அதிக வருத்தமடைந்தவளே போல், 'இல்லவே இல்லை. அத்தகைய கௌரவக் குறைவான எண்ணத்தை நான் உம்மைப்பற்றி எப்போதும் அடைந்ததேயில்லை. அன்பரே! நான் அவ்வாறு ஏதேனும் தவறான அபிப்பிராயம் கொண்டிருந்தால் இவ்வளவு சிரமப்பட்டு உம்மை நான் இங்கு தனியாகச் சந்திப்பேனா? நீர் என்னை நேசிப்பதாகச் சொன்னதை ஒப்புக்கொண்டு நானும் உங்களை நேசித்ததால் என் வாழ்க்கையையே உம்மிடம் ஒப்படைத்து விடுவது என்னும் முடிவு செய்துகொண்டதனால்தானே நான் உங்களை இவ்வாறு தனியே சந்திக்கிறேன். நான் உங்களை மனமார நேசிக்கிறேன் என்பதை நீங்கள் சந்தேகிப்பதாக இருந்தால்

நாம் இனி இவ்வாறு சந்திக்க வேண்டியதேயில்லை. உங்களிடம் எனக்குள்ள காதல் காரணமாக நான் இறக்க நேரிட்டாலும் அதைப்பற்றிப் பாதகமில்லை. மேலும் உங்களின் உண்மையான நிலையை நீங்களே தெரிவித்திருக்கும்போது அது சம்பந்தமாய் ஏன் தகராறு ஏற்படவேண்டும்' என்றாள்.

அவள் அவ்வாறு கூறியதும் மேற்கொண்டு பேசுவதற்கு மயங்கியதால் துளசிங்கம் பிரபு மீண்டும் கவலையுடன், அப்படியிருந்தும் நீ உன் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க மயங்குகிறாயே. தயவுசெய்து விவரமாகப் பேசு' என்று கேட்டுக்கொண்டான்.

அப்போது கற்பகம், 'நான் என் மனதிலுள்ளதை விவரமாக உம்மிடம் அறிவித்து விடுகிறேன். இன்னும் நாம் எவ்வளவு காலம் இவ்வாறு இரகசியமாகச் சந்திப்பது என்று கேட்டீரல்லவா? இந்தக் கஷ்டத்தை நிவர்த்திக்க வேண்டுமாயின் நாம் பகிரங்கமாக விவாகம் செய்து கொள்வதைத் தவிர்த்து வேறு வழியில்லை. ஆனால் என் தாயார் உம்மைப் பற்றிப் பல விஷயங்களைக் கூறியிருக்கிறாளல்லவா? அதில் ஒரு விஷயத்தைப்பற்றி நான் உங்களிடமும் தெரிவித்ததில்லை. அதைப்பற்றிக் குறிப்பாகக் கூறியது மில்லை. அதைத் தெரிவித்து அதனால் உங்களுக்கு மனக்கலக்கத்தை உண்டாக்க விரும்பவில்லை' என்று சொல்லி முடிப்பதற்குள் துளசிங்கம் பிரபு, அவள் எதைப்பற்றிக் கூறுகிறாளோ என்பதை அறிந்துகொள்ள முடியாமல் ஆத்திரமும் பரபரப்புமடைந்து தன் சரீரம் முழுதும் நடுங்க, 'கற்பகம்! தாமதம் செய்ய வேண்டாம், உன் மனதிலுள்ளதை உடனே தெரிவித்து விடு' என்றான். அச்சமயம் கற்பகத்தின் மனதில் உண்மையாகவே அதைரியம் ஏற்பட்டது. இவ்விஷயத்தில் மட்டும் தன் தாய் கூறியது உண்மையாகவே இருக்கலாம் என்று நம்

பினள். அதனல் தன் காதலனுடன் கூடி வாழ முடியாமற் போகும் நிலைமை ஏற்படுமே என்று வருந்தினள். ஆகவே அவளுக்கும் தெரியாமல் அவளது கண்களினின்றும் நீர் ஆருகப் பெருகியது. 'ஐயோ! அதற்குமேல் ஒன்றும் பேச முடியவில்லையே. என் நா எழ மாட்டேன் என்கிறதே!" என்று கதறினள்.

அப்போது துளசிங்கம் பிரபு, 'கற்பகம்! நீ என்னை பய முறுத்துகிருயே! நீ துக்கிப்பதன் காரணமென்ன? அவ்வளவு பயங்கரமான செய்தியா அது?' என்று ஆர்வத்துடன் கேட்டான். உடனே கற்பகம் தன் காதலனது முகத்தை உற்றுப் பார்த்துக்கொண்டே, 'ஆ! அச்செய்தி பயங்கரமானதாகவு மிருக்கலாம். ஆனல் அச்செய்தி உண்மையாக இராதென்றே நினைக்கிறேன். நீர் என்னை இப்படியும் ஏமாற்றி யிருப்பீர்கள் என்று நான் நினைக்கவில்லை' என்று கூறியதும் துளசிங்கம் மிக்க துக்கத்துடன், கற்பகம்! என்ன இது? நீ சொல்லப் போகும் விஷயம்தான் என்ன? அதைத் தெரியப் படுத்துவதில் சிறிதும் தாமதம் வேண்டாம். 'என்னிடம் எந்த விஷயத்தைத் தெரிவிப்பதிலும் நீ சங்கோசப் படலாகாது' என்றதும் அவளும், 'ஆம்; நமக்குள் எதற்கும் சங்கோசம் கூடாது என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன் இப்போது என் மனதில் தோன்றி என்னை வருத்தி வரும் விஷயத்தை என் தாயார் என்னிடம் சொல்லிச் சில மாதங்களாயிற் றென்ருலும் உமது மனத்தில் கலக்க மூண்டாக்க இஷ்டமில்லாமலேயே அதைப்பற்றிக் கூருமல் இருந்து விட்டேன். ஆனல் இன்று நான் என் தமக்கையுடன் நமது காதல் சம்பந்தமாகப் பல விஷயங்கள் பேசிக் கொண்டிருந்ததில் இது சம்பந்தமான எல்லாச் சந்தேகங்களையும் போக்கிக் கொண்டு விடவேண்டும் என்று எனக்குத் தோன்றியது.

மேலும் இப்போது நீங்களும் என்னை மணந்து கொள்ளக் கூடிய சௌகர்யம் உங்களுக்கு ஏற்பட்டிருப்பதாக அறிவித்தபடியால், சந்தேகத்தைப் போக்கிக் கொள்ளவேண்டிய அவசியம் அதிகமாயிற்று. ஆகவே இப்போது நாம் எதையும் ஒளி மறைவின்றிப் பேசவேண்டியது அவசியமாகும்' என்று கூறி முடிக்கு முன்னர், துளசிங்கம், 'கற்பகம்! நானும் அதைத்தானே சொல்கிறேன். ஒளி மறைவில்லாமல் எதையும் சொல்லி விடும்படி கேட்டிருக்கிறேனே. நீ இவ்வாறு சொல்லாமல் தாமதம் செய்வதால் என் மனம் எவ்வளவு கஷ்டப்படுகிற தென்பதை நீ அறியவில்லை. உன் மனதில் இருக்கும் சந்தேகம்தான் என்ன! அதை உடனே தெரியப்படுத்தினால் நான் நிவர்த்தி செய்கிறேன்' என்று கேட்டான்.

அப்போது கற்பகம், 'பிரபுவே! சொல்லி விடுகிறேன். கேளும், உங்களுக்கு முன்பே கலியாணமாகி இருப்பதாகவும், நீங்கள் மனைவியைவிட்டுப் பிரிந்திருந்தாலும் அப் பெண்மணி உயிருடன் இருப்பதாகவும் கேள்விப்பட்டேன்' என்று கூறி அதற்குமேல் ஒன்றும் பேசமுடியாமல் மௌனமாகத் தன் காதலனை உற்றுப் பார்த்துக்கொண்டே நின்றாள். துளசிங்கம் பிரபுவின் முன் ஒரு பெரிய இடி விழுந்திருந்தாலும் அவன் அவ்வளவு திக்பிரமை யடைந்திருக்க மாட்டான். இச் செய்தியைக் கேட்டதும் பிரமையடைந்து வெளுத்த முகத்துடன் நின்றான். கற்பகத்தின் இடுப்பைச் சுற்றிலுமிருந்த அவனது கரம் தானாகவே நழுவி விழுந்து விட்டது. என்ன செய்வதென்று ஒன்றும் தோன்றாதவனாய்த் தன் காதலியின் [illegible] பார்த்துக் கொண்டே நின்றான். [illegible] முகத்[illegible]ண்டே தான் வெளிப்படுத்[illegible] அவ் விஷயம் உண்மையாக[illegible]தான் இருக்கும் என்[illegible] [illegible]ணர்ந்த அவள் அதிக துக்கத்[illegible]ன்,

18571

'ஐயோ கடவுளே! நான் சந்தேகித்தது உண்மைதானா? உண்மை என்றே நிச்சயமாகத் தெரிந்துவிட்டது,' என்று கூறிக்கொண்டே தன் இருகாங்களாலும் முகத்தை மூடிக் கொண்டு ஓவென்று அழலானாள்.

அதைக் கண்டதும் துளசிங்கமும், 'ஆம், அது உண்மைதான். ஆனால் இந்தப் பரம ரகசியம் எப்படி வெளிப் பட்டு விட்டதோ? தெரியவில்லையே' என்று கேட்டபோது கற்பகம் ஆத்திரத்துடன், 'அவ்விஷயம் எப்படி வெளிப் பட்டாலென்ன? அது உண்மைதான் என்று நீயே ஒப்புக் கொண்டு விட்டாயே! அப்படியிருந்தும் என்னை ஏன் ஏமாற் றினாய்?' என்று கூறிக்கொண்டே இனி அவன் முகம் பார்க் கக் கூடாதென்னும் எண்ணத்துடன் அவ்விடத்தை விட்டுச் செல்ல முயன்றபோது அவன் அவளது கையைப் பிடித்துக் கொண்டு அவள் காலில் விழுந்து, சிறிதுநேரம் அங்கேயே தங்கி யிருந்து தான் சொல்லப்போவதைக் கேட்கும்படி வேண்டிக்கொண்டான். அவன் முகத்தைப் பார்க்கும் போதே அவளுக்கு ஏதோ பயங்கரம் தோன்றியதென்று லும், அவன் தான் விவாகம் செய்துகொண்டது உண்மை யென்று ஒப்புக்கொண்டதால் தன் வாழ்க்கையே அழிந்து போயிற்றென்று அவள் கருதினாலும், அவனிடம் இன்னும் சிறிது அன்பு உள்ளத்தில் இருப்பதாகவே நினைத்ததால் அவனை அத்தகைய நிலைமையில் விட்டுக் செல்ல மனமின்றி அவன் சொல்வதைக் கேட்க நின்றாள்.

அப்போது கற்பகம் தன் காதலனை துளசிங்கத்தைப் பார்த்து மெதுவான குரலில் துக்கத்துடன், 'பிரபு, நீர் சொல்ல விரும்புவதைக் கேட்க நான் மறுக்கமாட்டேன். என்ன சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லுங்கள்' என்று கேட் டாள். அவள் அங்கேயிருந்த கருங் கல்லினாலான ஒரு பல

கையின்மீது உட்கார்ந்தாள். பிரபுவும் அவளது பக்கத்தில் உட்கார்ந்தான். தன்னை ஏமாற்றிய அவன் அருகில் உட்கார்ந்ததும் அவளுக்குத் துக்கம் அதிகரித்து விட்டதால் பெருமூச்சு விடலானாள். அதைக் கண்ட துளசிங்கம், 'ஓ, தயவு செய்து நிதானமாக இரு. உன்னையே நீ சமாதானம் செய்துகொள். நான் உன் காலடியில் விழுந்து சாவதைக் காண உனக்கு விருப்பமா? நான் எப்படிப்பட்ட துயரத்தையும் சகிப்பேன். ஆனால் நீ இவ்வாறு துக்கப்படுவதைக் காண நான் சிறிதும் சகியேன். இந்தத் துக்கத்துக்கு நானே காரணமாதலால் இதைக் காணும்போதே எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போ லிருக்கிறது. நீ எல்லா விஷயங்களையும் அறிந்திருப்பதாலும்' என்று சொல்லி முடிப்பதற்குள் கற்பகம் அவளுடன், 'அப்படியானால் எல்லா விஷயங்களையும் விவரமாகக் கூறுங்கள். உங்களிடம் குற்றமில்லையென்றால் அதை நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்', என்றாள்.

உடனே துளசிங்கம், 'நீ நிதானமாகவும் மன அமைதியுடனும் இருந்து கேட்பதாயின் நான் எல்லா விவரங்களையும் கூறுவேன். மிக்க ஆச்சர்யமான விவரத்தை நீ கேட்கப் போகிறாய். இப்போது நான் சொல்லப்போகும் கதையைக் கேட்டால் பிரபல நாவல்களெல்லாம்கூட இதற்கு இணையாகாதென்று நீயே தெரிந்து கொள்வாய். நான் வேண்டுமென்றே விஷயத்தை உன்னிடம் மறைத்து வைக்கவில்லை. நான் இப்போதும்கூட கலியாண மாகாதவனென்றே கூறலாம் என்பதை நான் சொல்லம்போகும் விவரத்தால் நீ அறியலாம்' என்று கூறியதும் கற்பகம் சிறிது தைரியத்தையும் சந்தோஷத்தையும் அடைந்தவளேபோல், 'ஆ, இவைகளெல்லாம் உண்மையா யிருந்தால்?' என்று கூறினாள். அப்போது

அவனும் திருப்தி யடைந்து அவளது காதைப் பிடித்துக் கொண்டு, 'நான் என் கதையை ஆரம்பிக்கட்டுமா?' எனவும், அவள், 'உண்மை விஷயம் தெரியாமல் என் மனம் அடையும் கஷ்டம் தெய்வத்துக்குத்தான் தெரியவேண்டும. உடனே ஆரம்பித்து விவரமாகச் சொல்லுங்கள்,' என்று கேட்டாள்.

துளசிங்கம் பிரபுவும் பின் வருமாறு தன் கதையைக் கூறலானான்:— என் அன்புள்ள கண்மணி! எனது தந்தை எங்கள் சொந்த தேசத்தில் அரசனுக்கு விரோதமாக மற்றொரு கோஷ்டியினருடன் சேர்ந்துகொண்டதால் அரசன் எங்கள் ஆஸ்திபாஸ்திகளையெல்லாம் பறிமுதல் செய்து விட்டான். என் தந்தை யாருடன் சேர்ந்து கொண்டாரோ அந்தக்கோஷ்டியினர் வெற்றியடைந்து ராஜ்யத்தைக் கைப்பற்றியபோது நன்றிமறந்தவர்களாய் என் தந்தையின் உதவியையும் மறந்து அவருக்கு எத்தகைய உதவியும் செய்யாமல் விட்டு விட்டனர். அதனால் அவர் மனமுடைந்து இத்தேசத்திற்கு வந்து விட்டார். ஆயினும் எட்டு வருஷங்களுக்கு முன் அவர் மீண்டும் எங்கள் தேசம் சென்று ஏதோ நன்மையடைய முயன்றபோது திடீரென்று வியாதி கண்டு இறந்து போனார். அப்போது நான் இத்தேசத்தில் இருந்தேன். என் தந்தையின் மரணச் செய்தியைக் கேட்டதும் நான் அங்கு ஓடினேன். மரணச் சடங்குகள் முடிந்த பின்னர் என் ஆஸ்தி பாஸ்தியைப்பற்றி விசாரித்ததில் ஒன்றுமில்லையென்று தெரிந்தது. ஏதோ உபயோகமில்லாத பிரபுப் பட்டம் மட்டும் கிடைத்தது. இதில் என்ன பிரயோசனம். வெறும் கௌரவம் கிடைக்குமே தவிர வேறொன்றுமில்லை. இதை விட வியாபாரத்தில் என்னை பழக்கி யிருந்தால் எவ்வளவோ பிரயோசனமாக இருந்திருக்கும். நான் பிறகு அத்தேசத்தின் அரசனுக்குப் பலமுறை என் விஷயத்தைப்பற்றி

விண்ணப்பித்துக்கொண்டேன். அதனாலெல்லாம் எத்தகைய பயனும் விளையவில்லை. இவ்வாறு மூன்று வருஷ காலம் நான் அங்கே காலத்தைக் கழித்து விட்டேன். இதற்குள் என்னிடமிருந்த சொற்ப தொகையும் செலவாய் விட்டது. கையில் பைசாவும் இல்லாமல் கடன் கொடுப்பாருமின்றி, என்ன கதி என்று விசாரிப்பாருமில்லாமல் அலையலானேன். என் கல்வி எதற்கும் பயன் படவில்லை. வியாபாரிகளிடம் அமைந்து வேலை செய்யவும் முடியவில்லை. சேனையில் சிப்பாயாக அமரலாமென்றாலும் என்னையும் என் தந்தையையும் துரோகம் செய்த அரசனுக்காகக் கத்தி எடுத்து யுத்தம் செய்வதா என்னும் எண்ணம் தோன்றியது, குமாஸ்தா வேலையும் எனக்கு கிடைக்காது என்பது தெரிந்துவிட்டது. ஆயினும் ஏதேனும் ஒரு வேலை செய்துதான் ஆகவேண்டும். தங்க இடமுமில்லை. சாப்பாட்டுக்கு வசதியுமில்லை என்செய்வது? தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று தோன்றிவிட்டது. ஆகவே ஐந்து வருஷங்களுக்கு முன் ஒருநாள் பகலெல்லாம் நான் பற்பல விதமான சிந்தனைகளுடன் சுற்றித் திரிந்துவிட்டு இரவு ஒன்பது மணி சுமாருக்கு அவ்வூரின் வெளியிலுள்ள ஒரு பெரிய பாலத்தின் அருகில் சென்றேன். எதற்காக என்று நான் மீண்டும் சொல்லவேண்டியதில்லை.

நான் அப்பாலத்தின் அருகில் செல்லும்போது யாரோ ஒருவர் என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டதுபோல் கேட்டது. நான் உடனே திரும்பிப் பார்த்ததில் வெகுதூரத்தில் ஒரு உயரமான, பெருந்தன்மையுள்ள மனிதன் நின்றிருப்பதைக் கண்டேன். அவன் முகத்திலிருந்தே அவன் இரத்தினபுரியைச் சேர்ந்தவன் என்று தெரிந்துவிட்டது. அவன் என்னை என் பெயர் கொண்டு அழைத்தது சரிதானே என்று

கேட்டான். அவனுக்கு அது எப்படித் தெரியுமென்று நான் கேட்டபோது என் தகப்பனருடன் நான் இருந்ததைச் சில வருஷங்களுக்கு முன் தான் கண்டதாகக் கூறினன். பக்கத்திலிருந்த ஒரு ஓட்டலுக்கு அழைத்துச் சென்று தனியாக ஒரு மூலையில் உட்காரவைத்து எனக்கு வேண்டிய தின்பண்டங்களை யெல்லாம் கொடுத்ததுடன் என்னிடம் சில யோசனையைக் கூறப் போவதாகவும் அதன்படி நான் நடக்தால் இப்போதுள்ள நிலைமையில் சிறிது சௌகரிய மேற்படுமென்றும் தெரிவித்தான். அதன் மீது என் நிலைமையைப் பற்றிப் பல விஷயங்களை விசாரித்தான். அவன் உண்மை பேசுபவன் போலவும் என்னிடம் அநுதாபம் காண்பிப்பவன் போலவும் காணப்பட்டதால் நானும் ஒளி மறைவின்றி என் விஷயங்களை யெல்லாம் அவனிடம் தெரிவித்தேன். அவனும் எல்லாவற்றையும் கவனத்துடனும் அக்கரையுடனும் கேட்டான். எல்லாம் கேட்டு முடிந்த பிறகு அவன் சொல்லப் போகும் யோசனையை நான் கேட்பதாயின் தன் பெயரையும் மற்றொரு இரத்தினபுரிமாதின் பெயரையும் தெரிவிப்பதாகச் சொன்னன். நான் அந்த யோசனையை என்னிடம் தெரிவிக்கும்படி கேட்டேன். பிறகு அவன் என்னிடம் "என் வசம் இரத்தினபுரி மாது ஒருத்தி இருக்கிருள். அவளுக்கு ஒரு கணவனைத் தேடவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அக்கணவன் இரத்தினபுரியைச் சேராமல் அன்னிய தேசத்தனுய் இருக்கவேண்டும். அவள் குற்றமற்ற பரிசுத்த மாணவள். ஆனல் இவ்வளவு அவசரமாக விவாகம் நடக்க வேண்டியதன் காரணம் முதலியவைகள் இப்போது தெரிவிக்க முடியாது. அவள் மிகவும் அழகானவளாய் இருக்கிருள். ஆனல் யார் அவளுக்குக் கணவனுகிருனே அவனுக்கு அவளுடைய அழகினல் எத்தகைய பயனும் விளையப் போவ

தில்லை. ஏனெனின் விவாகச் சடங்கு முடிந்ததுமே கணவ னும் மனைவியும் பிரிந்துவிட வேண்டியதுதான். பிறகு ஒரு வரை யொருவர் பார்க்கவும் முடியாது. ஆகவே கணவன் என்று பெயர் கொடுப்பது தவிர வேறொன்றுமில்லை. உனக்கு அதற்குச் சம்மதமாயின் ஐயாயிரம் பவுன் கிடைக்கும். வேண்டுமாயின் ஒருநாள் சாவகாசம் தருகிறேன். இதற் குள் யோசித்துச் சொல்'' என்று சொன்னான்.

என்று கூறி முடித்ததும் துளசிங்கம் பிரபு சிறிது நேரம் பேசாமல் இருக்க அதைக் கேட்டுக்கொண்டிருந்த கற்பகம், 'ஆஹா' என்று ஆச்சர்ய மடைந்தவள்போல் பெருமூச்சு விட்டாள்.

மேலும் துளசிங்கம் பிரபு கூறத் தொடங்கிச் சொன்ன தாவது:—கற்பகம் நீ இதைக் கேட்டு ஆச்சர்யப் படலாம். நானும் அந்த மனிதன் என்னிடம் சொன்னதைக் கேட்டு ஆச்சர்யப்பட்டேன். அந்த யோசனையைக் கேட்டதும் எனக்கு அதிருப்தியே ஏற்பட்டதென்றாலும் தங்க இட மில்லாமலும், ஆகாரத்துக்கு வசதி இல்லாமலும், கையில் பைசாவும் இல்லாமலும் இருந்த எனக்கு ஐயாயிரம் பவுன் கிடைக்கிறதென்றால் அதை விட்டுவிட முடியுமா? ஆகவே அத்தொகையைப் பெறவேண்டுமென்னும் ஆசை ஏற்பட் டது. அவ்வளவு பெரியதொகையைப் பெறுவதற்காக நான் செய்யவேண்டியதென்ன? பிரபுவாகிய ஒருவன் அம்மாதை விவாகம் செய்து கொண்டான் என்னும் பெயரைக் கொடுப் பதுதானே. நான் அதற்கு இணங்கியதைக் கேட்டு நீ ஆச் சர்யப் படலாம். ஆயினும் என் நிலைமை எனக்கல்லவோ தெரி யும். ஆதலால் யோசிப்பதற்கென எத்தகைய அவகாசமும் எடுத்துக் கொள்ளாமல் உடனே என் சம்மதத்தைத் தெரி வித்து விட்டேன். பிறகு அவன் தன் பெயரையும், நான்

மணந்துகொள்ள வேண்டிய மாதின் பெயரையும் தெரிவித்தான். அம்மாது அவனுடைய பெண்ணு என்று நான் கேட்டதற்கு அப்படி யொன்று மில்லையென்றும், விவரத்தை யெல்லாம் நான் கேட்க லாகாதென்றும் கண்டிப்பாகக் கூறி விட்டான். ஒரு முக்கிய காரணமாக இதையெல்லாம் இரகசியமாக வைத்துக்கொள்ளவேண்டி யிருக்கிறதென்றும் தெரிவித்தான். பிறகு அவன் என்னிடம் கொஞ்சம் பணத்தைக் கொடுத்துவிட்டு மறுநாள் பகல் பதினொரு மணிக்கு அதே இடத்தில் சந்திக்கும்படி சொன்னான். பிறகு நாங்கள் பிரிந்துவிட்டோம். நான் அன்றிரவு முழுதும் தூங்காமல் நான் ஒப்புக்கொண்ட விஷயத்தைப்பற்றியே யோசித்துக் கொண்டிருந்தேன். இப்படிப்பட்ட கேவலமான ஒரு வேலையில் ஈடுபடுவதைவிட வேறு அவமான மில்லை யாதலால் அதை விட்டுவிடலாமென்றும் நினைத்தேன். ஆயினும் என் செய்வது? என் வறுமையின் கொடுமையைத் தாங்க முடியவில்லை. பசிக்குமுன் பத்தும் பறக்கு மல்லவா? ஆகவே மறுநாள் காலை என்னிடமிருந்த பணத்தைக்கொண்டு என்னை அலங்கரித்துக்கொண்டு குறிப்பிட்டவேளையில் தவறாமல் குறிப்பிட்ட இடம்போய்ச் சேர்ந்தேன். அங்கு எனக்கு முன்பாகவே அந்த மனிதன் வந்திருந்தான். என் முகத்தைப் பார்த்ததிலிருந்தே நான் என் எண்ணத்தை மாற்றிக்கொள்ள வில்லை யென்று அவன் தெரிந்து கொண்டதால் என்னை எதுவும் கேட்கவில்லை. உடனே ஒரு வாடகை வண்டியை அமர்த்திக்கொண்டு அதே நகரத்தின் மற்றொரு பாகத்திலுள்ள ஒரு ஓட்டலுக்குச் செல்லும்படி அவ்வண்டிக்காரனுக்குக் கட்டளையிட்டான். அங்குச் சென்றதும் அவன் என்னை ஒரு அறையில் உட்கார வைத்துவிட்டு மற்றொரு அறைக்குச் சென்று சொற்ப நேரத்துக்குள் என் அறைக்கு

மற்றும் மூன்று மாதர்களுடன் வந்தான். அதில் ஒரு மாது அவன் வயதளவே இருந்தாள். அவள் தன் மனைவி எனச் சொல்லிக்கொண்டான். அவளைவிட வயதில் சிறியவளான மற்றொரு மாது மணப்பெண்ணின் தோழியாக வந்தாள். அவள் அவனுக்கு ஏதேனும் பாத்திய மிருக்கலாமென்று நினைத்தேன். ஆனால் என்ன பந்துத்வ மென்று சொல்ல முடியவில்லை. மூன்றுவது பெண்தான் என் மனைவி எனச் சொல்லப்படுபவளாக இருந்தாள். வாஸ்தவத்திலேயே அவள் மிக அழகானவளாய் இருந்தாள். அவள் அழகை வருணிப்பது அசாத்தியம். எனதன்புள்ள கற்பகம்! நான் இவ்வாறு சொல்வதால் நீ ஆத்திரப்பட வேண்டாம். உண்மையைச் சொல்வதற்காகவே அவள் அழகானவளென்று கூறினேன். ஆனால் அவளுடைய அழகும் நடை உடை பாவனையும் எனக்குப் பிடிக்கவில்லை. இத்தகைய விசித்திர முறையில் விவாகம் செய்யவேண்டிய அவசியமென்ன என்பதுபற்றித் தெரிந்து கொள்ளவேண்டுமென்னும் ஆவல் எனக்கு அதிகமாகவே இருந்தது. ஒரு யௌவன மாதுக்குக் கணவனை ஏற்படுத்துவதும், ஆனால் அவனுடன் அவளை வாழ விடாமல் தனித்திருக்கும்படி செய்வதும் எதற்கென்றும், அவள் உண்மையிலேயே பரிசுத்தமானவளாய் இருந்தால் இந்த இரகசியம் எதற்கு என்றும் எனக்குத் தெரியவில்லை. ஆனால் இதைப் பற்றியெல்லாம் யோசிக்கவும் எனக்குச் சாவகாசம் இருக்கவில்லை ஏனெனின் அந்த மனிதன் எங்களை மிக அவசரமாக வெளியில் அழைத்துச் சென்று அங்குக் காத்திருந்த ஒரு வண்டியில் ஏற்றி இரத்தினபுரி புரோகிதர் தங்கி யிருக்கும் ஒரு மடத்துக்கு அழைத்துச் சென்றான். அம்மாதர்கள் சாதாரண உடைகளையே அணிந்திருந்தார்கள். அவர்களை யாராவது பார்த்தால் கலியாணத்துக்குச் செல்லும் கூட்டமென்றே

நினைக்க மாட்டார்கள். கலியாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் முன்னமே செய்யப்பட்டிருந்தன. நாங்கள் அங்கே சென்றபோது புரோகிதரும் அவரது குமாஸ்தாவும் எங்கள் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஆகவே நாங்கள் சென்றதும் சிறிதும் தாமதமின்றி விவாகச் சடங்கு ஆரம்பிக்கப்பட்டது. அச்சடங்கு நடைபெறும்போது என் மனதில் பல விதமான உணர்ச்சிகள் தோன்றியது. பரிசுத்தமானதும் மதத்தின் பெயரால் நடைபெறவதுமான ஒரு பரிசுத்த இடத்தில் இவ்வாறு பொய்யான சடங்கு ஒன்று நடைபெறுவதைக் காண என் மனம் அதிகம் வருந்தியது. நான் அச்சமயத்தில் மணமகளின் முகத்தை உற்று நோக்கினேன். அவள், அசம்பாவிதம் ஒன்றும் நடைபெறாதது போலவும் அமைதியுடனும் சஞ்சலமின்றியும் உட்கார்ந்திருந்தாள். இப்போது நடைபெறும் விவாகம் என்னும் சடங்கினுல் மிக்க அழகானவளும், யௌவனம் வாய்ந்தவளுமான அப்பெண்மணியின் வாழ்க்கை கெட்டுப்போய்த் தனிமையளாய் இருக்கவேண்டுமே என்பதை அவள் அறியாமற் போனதென்ன என்னும் கேள்வியே என் மனதில் எழுந்தது. மேலும் இதனுல் அவள் வேறு யாரையேனும் மனமாரக் காதலித்தாலும் அல்லது காதலிக்கப்பட்டாலும் அவரை மணந்துகொள்ள முடியாமற் போகிற தல்லவா' என்றும் யோசித்தேன். எப்படியோ ஒன்று, விவாகச்சடங்கு முடிந்து விட்டது. பிறகு நாங்கள் அங்கிருந்து புறப்பட்டுப் பழையபடி ஓட்டலுக்கு வந்து சேர்ந்தோம். வரும் வழியில் வண்டியில் அந்த மனிதனும் அவனது மனைவியும் எதை எதையோ பேசிக்கொண்டு வந்தார்கள். கடைசியில் ஓட்டலுக்கு வந்து சேர்ந்து ஒரு

அறையில் சென்றதும் மாதர்கள் மூவரும் எனது கையைக் குலுக்கினார்கள். எனது மனைவி என்று சொல்லப்பட்ட அப்பெண்ணும் மற்ற இருமாதர்களைப்போல் மன அமைதியுடன் இருந்தாளே யொழிய கணவனென்று சொல்லப்பட்ட என் கையைத் தொட்ட பின்னரும் அவளுக்கு எத்தகைய மனோவிகாரமும் உண்டாகவில்லை. பிறகு அம்மூன்று மாதர்களும் மற்றொரு அறைக்குப்போய் விட்டார்கள். நானும் அந்த மனிதனும் மட்டும் அவ்வறையில் தங்கினோம். அப்போது அவன் என்னிடம் அவன் வாக்களித்தபடி ஐயாயிரம் பவுன்களையும் எண்ணிக் கொடுத்து விட்டான். பிறகு அவன் என்னிடம், 'நண்பா! இப்போது நாம் இருவரும் பிரிவதால் பரஸ்பரம் மறந்து விட்டதாக நினைக்கவேண்டாம். உனக்கு நல்ல அதிர்ஷ்டம் கிடைத்து பிற நண்பருடைய உதவியை எதிர்பாராதவகையில் வாழ்க்கை ஏற்பட்டால் நான் உன்னைப்பற்றிக் கவலை கொள்ளப் போவதில்லை. ஆனால் துரதிர்ஷ்ட வசத்தால் நீ மீண்டும் வறுமையில் அகப்பட்டுக் கொண்டு கஷ்டப்பட்டால் என்னிட மிருந்து உனக்கு உதவி கிடைக்கு மென்பதை நிச்சயமாக நம்பு' என்றான். எனக்கும் அங்கு இருக்கப் பிடிக்கவில்லை. அவனும் நான் வெளியே போகலாமெனக் குறிப்புக் காட்டினான்.

என்று துளசிங்கம் பிரபு கூறி முடித்ததும் சொற்பநேரம் மௌனமாக நின்றான். அப்போது கற்பகம் கவலையுடன் சந்தேகத்துடனும் அவனை உற்று நோக்கினாள். அவன் வறுமையால் பீடிக்கப்பட்ட படியாலும், தற்கொலையே செய்து கொள்ளலாமா என்று முடிவு செய்திருந்த படியாலும் அந்நிலைமையில் அவன் அந்தப் புதிய மனிதனுடைய யோசனைக்கு இணங்கியதில் தவறு ஒன்று மில்லை என்றே கருதினாள். ஆனால் அவனுடன் தான் எவ்வாறு நடந்து

கொள்வது என்பதிலேயே அவளுக்குக் கவலை அதிகமாய் விட்டது. அந்த வேளையில் திடீரென்று அவள் மனதில் ஒரு வித ஞாபகம் தோன்றியது. ஆகவே அவள் நம்பிக்கையுடனும் சந்தோஷத்துடனும் அவனைப் பார்த்து, 'ஆனால் சொற்ப நேரத்துக்கு முன் நீங்கள், விவாகமானவரல்லவென்று பகிரங்கப்படுத்த முடியும் என்று சொன்னீரல்லவா! அது என்ன விசேஷம்? அதன் கருத்து எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே. நான் இப்போது படும் மனக்கஷ்டம் எவ்வளவு என்பதை நீங்கள் அறியவில்லை. என் வாழ்க்கையின் இன்பமெல்லாம் இப்போது நீங்கள் சொல்லப்போகும் சொற்களிலேயே தங்கியிருக்கிறது' என்று மிக ஆவலுடன் கேட்டாள்.

அதற்கு துளசிங்கம் பிரபு பின்வருமாறு கூறினான்:— எனதன்புள்ள கற்பகம்! நான் அவ் விஷயத்தையெல்லாம் நன்றாக விளக்கிக் கூறுகிறேன். ஆயினும் நான், இப்போது நீ கேட்ட விஷயத்தைப்பற்றிச் சொல்வதற்குமுன் என் சம்பந்தமான மற்றும் சில விஷயங்களை உனக்கு அறிவிக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது. ஏனெனின் நான் இத்தகைய தவறான வழியில் சம்பாதித்த பணம் எனக்கு எவ்வகையிலும் சந்தோஷத்தைத் தரவில்லை என்பதை நீ அறிய வேண்டுமல்லவா? ஏதோ என் கஷ்ட காலத்தையொட்டி நான் அந்தத் துறையிலும் பணம் வாங்கச் சம்மதித்தேனே யொழிய நான் இயற்கையில் அற்பனோ அல்லது கேவல சுபாவ முடையவனோ அல்ல என்பதை எல்லாம் வல்ல இறைவனே அறிவான். அற்ப விஷயங்களில் ஈடுபடும் சுபாவம் எனக்கு எப்போதும் கிடையாது. அப்போது ஏற்பட்ட அவசரமும் அவசியமுமான சந்தர்ப்பம் என்னை ஆட்கொண்டு அவ்வாறு புத்தி தடுமாறும்படி செய்துவிட்

டது. ஆகவே காரிய மெல்லாம் முடிந்தபின்னர் நான் ஏதோ ஒரு பெரிய குற்றத்தைச் செய்துவிட்டவன்போல் எனக்குத் தோன்றியது. ஆதலின் மறுநாள் விவாக ரத்து செய்துகொண்டு பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்னும் எண்ணத்துடன் அந்த ஓட்டலுக்கு ஓடினேன். ஆனால் அந்த மனிதனும் அவனுடன் இருந்த அந்த மாதர்களும் அங்கே இருக்கவில்லை. எனினும் சதா என் மனத்தை இவ்விஷயமே வருத்தி வந்தபடியால், அதிக சந்தோஷத்தைத் தரக்கூடிய வேறு துறையில் புத்தியைச் செலுத்தாமல் அப் பணத்தைக்கொண்டு வியாபாரத்தில் இறங்கினேன். ஆரம்பத்தில் வியாபாரம் சிறிது அபிவிருத்தியடைந்து வந்தது. ஆனால் சொற்ப காலத்துக்குள் கஷ்டம் ஏற்பட ஆரம்பித்தது. நான் பணம் போட்டு வைத்திருந்த பாங்கி முறிந்துவிட்டது. எனினும் நான் ஒருவாறாகச் சமாளித்துக்கொண்டு என் கடன்காரர்களுக் கெல்லாம் கடன் கொடுத்து விட்டுச் சில நூறு பவுன்களுடன் மிச்சமானேன். எனக்கு அவ்வாழ்க்கையில் ஒருவித வெறுப்பு ஏற்பட்டுவிட்டதால் நான் அங்கிருந்து புறப்பட்டு இரத்தினபுரிக்கு வந்தேன்.

இங்கு வந்த இடத்தில் உன் சினேகம் ஏற்பட்டது. அது சாதாரண சினேகமா? அளவுகடந்த அன்பும் காதலும் ஏற்பட்டுவிட்டது. உன்னைவிட்டுப் பிரிந்திருக்கவும் முடியவில்லை. மேலும் உன் நட்பு எனக்கு எல்லாவிதமான சுக சௌகரியங்களையும் கொடுப்பதாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு அன்பை என்னால் இழக்க முடியுமா? நான் என் விவாக சம்பந்தமான விஷயத்தை உன்னிடம் சொல்லாமல் மறைத்து வைத்தது பெரிய குற்றம்தான். ஆயினும் பாழாய்ப் போன அந்த விவாகச் சடங்கு நடந்தபிறகு அவளைப் பார்க்க

வேயில்லை. அவள் என் மனைவியானபிறகு என்ன பெயர் சூட்டப்பட்டதோ அப்பெயருடன் யாரேனும் ஒரு மாது இத்தேசத்தில் இருக்கிறாளோ என்று என்னாலானவரை விசாரித்துப் பார்த்துவிட்டேன். அவளைப்பற்றிய தகவல் ஒன்றுமே தெரியவில்லை. அந்தப் புது மனிதனுடைய தகவலாவது தெரிகிறதா என்றும் அப்படித் தெரிந்தால் அவனிடம் என் மனைவி என்பவளின் செய்தி எதையாவது தெரிந்து கொள்ளலாமென்றும் நினைத்தேன். விசாரித்துப் பார்த்ததில் அந்த மனிதனுடைய பெயரையுடைய ஒருவன் அன்னிய தேசத்தில் இருப்பதாகவும், ஆனால் அவனைப்பற்றிய தகவலொன்றும் தெரியாதென்றும் சொன்னார்கள். ஒருகால் மற்றும் வேறு சந்தர்ப்பங்களையொட்டி அவள் வேறு பெயரை வைத்துக்கொண்டு மறைவாக எங்கேனும் வாழ்ந்து வருகிறாளோ என்று நினைத்து அந்த விஷயத்தையே மறந்துவிட்டேன். அதனால் அதை உன்னிடமும் சொல்லவில்லை. ஆகவின் அதைச் சொல்லாமலிருந்தது ஒரு குற்றமா? நீ அழகிலும், அன்பிலும், நற்குணத்திலும் குறைவானவளாக இருந்தால் எனக்கு உன்னிடம் ஏற்பட்ட மோகத்தை அடக்கிக் கொண்டு விஷயத்தையும் சொல்லி என் கடமையை முடித்துவிட்டிருப்பேன். ஆனால் இவ்வளவு அழகும், அன்பும், நற்குணமுமுடைய உன்னை இழக்க என் மனம் சம்மதிக்குமா? உன்னாலேயல்லவோ எனக்கு வாழ்வு ஏற்படப்போகிறது? என் இன்பமெல்லாம் உன் சம்மதத்தில்தான் பொதிந்திருக்கிறது. நாம் இனி ஒருவரை யொருவர் சந்திப்பதில்லை என்று முடிவு செய்துகொண்டு இங்கிருந்து பிரிய நேரிட்டாலும் நான் உன் அன்பையும் உன்னையும் மறக்காமல் என் ஆயுள் முழுதும் உன் உருவத்தையே என் மனக்கண்ணால் தரிசித்துப் பூஜித்து வருவேன்.

என்று துளசிங்கம் கூறி நிறுத்தியதும், அவனது உரைகளைக்கேட்டு அவனிடம் விசுவாசமும் அனுதாபமும் அடைந்த கற்பகம் சிறிது நம்பிக்கையுடனும், கவலையுடனும், 'அன்புள்ள பிரபுவே! நீர் கூறுவதன் பொருள் ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. இன்னும் இது சம்பந்தமாய் என்னிடம் கூறவேண்டிய விஷயம் எதுவோ இருக்கிறதெனத் தெரிகிறது. நீங்கள் விவாகமாகாத தனி மனிதர் என்று சொல்லப்படுவதற்கு இன்னும் சில விஷயங்கள் வெளிப்படுத்த வேண்டியது அவசியமெனத் தோன்றுகிறதே' என்று கேட்டாள்.

அப்போது துளசிங்கம் சிறிது தைரியமும் சந்தோஷமும் அடைந்து தான் என்ன செய்தாலும் அவள் ஒன்றும் செய்யமாட்டாள் என்னும் எண்ணத்துடன் தனது கையை அவளது இடுப்பில் போட்டு அவளை அணைத்துக் கொண்டான். அவளும் அந்த அணைப்பினின்றும் விலகிக் கொள்ளாமல் அப்படியே நின்றாள். அவன், 'கண்மணி! நான் அதைத்தான் சொல்லப்போகிறேன். மூன்று வாரங்களுக்கு முன் ஒருநாள், என் மனைவி என்று சொல்லிக்கொள்ளவேண்டிய அம்மாதைக் கண்டேன்' என்று சொல்லி முடிப்பதற்குள் கற்பகம் அக்கத்துடனும் ஏமாற்றத்துடனும், 'ஆ! அப்படியானால் உமது மனைவி உயிருடன் இருக்கிறாளா? அவளை நீங்கள் கண்டீர்களா?' என்று பரபரப்புடன் கேட்டாள்.

அதற்கு துளசிங்கம் பிரபு பின்வருமாறு பதில் சொன்னான்:—ஆம்; நான் அவளைப் பார்த்தேன். நாங்கள் சந்தித்ததன் பயனாக ஏற்பட்ட முடிவை நீ அறிந்தால் இவ்வாறு துக்கமோ கவலையோ அடையமாட்டாய். நான் எந்த சந்தர்ப்பத்தில் எப்படி அவளைச் சந்தித்தேன் என்னும் விவரத்தையெல்லாம் இப்போது சொல்லமுடியாது. நாங்கள் இருவரும்

மூன்று வாரங்களுக்குமுன் சந்தித்தபோது பரஸ்பரம் ஒரு வரை யொருவர் அறிந்துகொண்டோம். இரத்தினபுரியை யடுத்த கிராமத்தில் அவளைச் சந்தித்தேன். அவள் அழகாக உடைகளை அணிந்திருந்ததுடன் சௌகரியமான வாழ்க்கை யையே நடத்துபவள்போலக் காணப்பட்டது. மேலும் அவள் வேடிக்கையாகவும் சந்தோஷமாகவும் என்னுடன் பேசினாள். அவள் இவ்வுலகில் என் மனைவி என்பதற்கு அறி குறியான பெயரை எப்போதாவது சொல்லிக்கொண்ட துண்டா? என்று கேட்டதற்கு இல்லை யென்று சொல்லிவிட் டாள். பிறகு நான் அவளுடைய கணவன் என்னும் முறை யில் என்மீது ஏதேனும் பாத்தியதை கொண்டாடுகிறாளோ என்று கேட்டதற்கும் அப்படி யொன்றுமில்லை என்று கூறி விட்டாள். மேலும் அவள், 'ஐயா! நான் சொல்வதைக் கேள். நான் உன் விஷயத்தில் தலையிட விரும்பவில்லை. அது போலவே நீயும் என் விஷயத்தில் எவ்வகையிலும் தலையிட மாட்டாய் என்று நம்புகிறேன். உன்னைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது ஒரு இரக சிய காரணத்தை யொட்டியே யாகும். அக்காரணம் அப் போதே முடிந்துவிட்டது. இப்போது நாம் இருவரும் விவாகரத்து செய்து கொள்வதென்றாலும் எனக்குச் சம்ம தமே' என்று கூறியதும் எனக்கு அதிக சந்தோஷ மாயிற்று. என் சந்தோஷத்தை ஒருவாறு அறிந்துகொண்ட அவள் மேலும் பேசுகையில், 'ஐயா, நாம் இருவரும் பரஸ்பரம் ஒரு வரை யொருவர் அறியாமலிருந்தும், எனக்கு உன்னைப்பற்றி ஒன்றுமே தெரியாமலிருந்தும் நம்மிடையே ஏற்பட்ட சம்பந் தம் காரணமாக நான் உன்னை ஒரு அன்பார்ந்த சிநேகித னாகக் கருதுகிறேனே தவிர வேறு ஒன்றுமில்லை யென்பதை நீ அறியவேண்டும். உன் பாவனையி லிருந்து நீ என்னிட

மிருந்து ஏதோ விரும்புவதாகத் தெரிகிறது. அப்படி ஏதே னும் இருந்தால் சங்கோசப்படாமல் கேள். உனக்குப் பணம் வேண்டுமா?' என்று கேட்டாள்.

அப்போது நான் எனக்கு அப்படிப்பட்ட கேவலமான எண்ண மெதுவுமில்லையென்றும், நான் ஒரு பெண்மணியி னிடம் காதல் கொண்டிருப்பதாகவும், அவளும் என்னைக் காதலிக்கிறாள் என்றும், ஆனால் அவளிடம் எனக்கு விவாக மான விஷயத்தைக் சொல்லவில்லை யென்றும், முதல் விவாக மானது சம்பந்தமான தஸ்தாவேஜ்கள் அகப்பட்டு அதை அழித்துவிட முடியுமானால் மிக சந்தோஷமாக இருக்கு மென்றும் சொன்னேன். அதைக் கேட்டதும் எனது மனைவி என்று சொல்லப்பட்ட அவள், அவ்விஷயத்தில் எனக்கு ஒரு வித ஆறுதலை உண்டாக்குவதாக வாக்களித்தாள். அந்த விவாக சம்பந்தமான எல்லா தஸ்தாவேஜ்களும் அவளிடம் இருப்பதாகவும், அதை என்னிடம் கொடுப்பதாகவும் நான் அதைக்கொண்டு என்ன வேண்டுமாயினும் செய்யலா மென் றும் தெரிவித்தாள். அப்போது நான் எவ்வளவு சந்தோஷ மடைந்திருப்பேன் என்பதை கற்பகம்! நீ யூகித்தறிவாய் என்றே நம்புகிறேன். ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப் பிட்ட நேரத்தில் நான் சந்தித்தால் அதைக் கொடுப்பதாகச் சொல்லி என்னைவிட்டுப் பிரிந்தாள். நாங்கள் இருவரும் சில நிமிஷ நேரமே மேற்குறித்த விஷயத்தைப்பற்றி மட்டும் பேசியதால் வெறும் அறிமுகமானவர்கள் என்னும் உணர்ச்சி யுடனேயே பிரிந்தோம். நாங்கள் இருவரும் பரஸ்பரம் கைகுலுக்கவுமில்லை. க்ஷேம சமாசாரங்களை விசாரித்துக் கொள்ளவுமில்லை. அதன்படி குறிப்பிட்ட நேரத்தில் என் விவாக சம்பந்தமான தஸ்தாவேஜ்கள் என்னிடம் சேர்ப்பிக் கப்பட்டன. அதை நான் என் இருப்பிடத்தில் வைத்துக்

கொண்டிருக்கிறேன். அழித்து விடவில்லை. அதை உனக்கும் காண்பிப்பேன். ஆனால் அதை எவருக்கும் காண்பிப்பதில்லை என்று உறுதி கூறி இருக்கிறேன். அந்த தஸ்தாவேஜ்களில் காணப்படும் பெயர்களைச் சொல்லவும் நான் துணியவில்லை. இனி எனக்குக் கலியாண மாயிற்று என்பதற்கு எத்தகைய ருஜுவும் கிடையாது. ஆகவே நான் கலியாண மாகாத தனியனே என்று கூறுவதில் குற்றமென்ன இருக்கிறது?

இதை யெல்லாம் கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்த கற்பகம் ஆத்திரப்பட்டு ஒன்றும் பேசிவிட வில்லை. நிதானமாக மனதுக்குள்ளேயே ஆராய்ந்தாள். அவள் தான் இனி என்ன செய்வது என்பதைப்பற்றியே சிந்தித்தாள். துளசிங்கம் பிரபுவை விவாகம் செய்துகொண்டால் அவளே அவனுடைய சட்ட பூர்வமான மனைவி ஆக முடியுமா? என்று யோசித்தாள். ஆனல் இரத்தினபுரி சட்டப்படி இவ்வளவு இரகசியமாகவும் ஒழுங்கற்ற முறையிலும் நடந்த அக் கலியாணம் செல்லுபடி யாகாது என்று நினைத்தாள். மேலும் அவளுக்கு அவனிடம் தனியாக் காதல் ஏற்பட்டிருந்தது. ஆகவே சொற்ப நேர யோசனைக்குப் பின்னர் தனக்குள் ஒருவிதமான முடிவுக்கு வந்து தன் அழகிய கரத்தைத் துளசிங்கம் பிரபுவினிடம் நீட்டி, 'அன்புள்ள பிரபுவே! நான் உம்மை விட்டுப் பிரியவே முடியாது. உங்களுடன் கூடுதல் என்னும் இன்பத்தைப் பெறலாம் எனப்படும் கனவை நான் மறக்க முடியாது. நான் கடைசிவரை உங்களை நேசிக்கவே செய்வேன்' என்று அன்பு நிறைந்த மொழிகளால் கூறினாள்.

அப்போது துளசிங்கம் பிரபு அவளை மார்புறத் தழுவிக்கொண்டு அவளது கன்னங்களிலும் வாயிலும் பல முத்தங்களைக் கொடுத்தான். பலவிதமான அன்பு கனிந்த வார்த்தை

களையும், நம்பிக்கை நிறைந்த உறுதி மொழிகளையும் இரகசியமாக அவள் காதில் கூறினான். மேலும் அவன், 'என தன் புள்ள கண்மணி! நான் நமது சம்பாஷணையின் ஆரம்பத்தில் கூறியதேபோல் என் சொந்த தேசத்திலேயே எனக்கு மிகத் தெரிந்த ஒருவர் அதிகார பதவியில் இருப்பதால் நான் ஒரு உயர்ந்த உத்தியோகத்தை யடைவேன் என்று தெரிவித்தேனல்லவா? அதனால் நாம் இருவரும் சௌகரியமாக வாழ்க்கையை நடத்தக்கூடிய அந்தஸ்து ஏற்படுமாதலின் நீ என்னுடையதாகவே இருந்து என் வாழ்க்கையைச் செம்மையுறச் செய்வாய் என்றே நம்புகிறேன்' என்று கூறினான். அதற்கு அவள், 'ஆம்! நீங்கள் அப்படிப்பட்ட அந்தஸ்தையடையும்போது நான் கட்டாயம் உங்களுடைய தாகவே இருப்பேன் என்பதிலும் சந்தேகமுண்டோ?' என்றாள்.

உடனே இருவரும் பரஸ்பரம் ஒருவரை யொருவர் ஆலிங்கனம் செய்துகொண்டனர். முத்தமிட்டுக் கொண்டனர். பல அன்பு வார்த்தைகளைப் பேசிக்கொண்டனர். துளசிங்கம் பிரபு தன் சரித்திரத்தையெல்லாம் உள்ளதை உள்ளபடி சொல்லிவிட்டதாலும், கர்பகத்தின் சந்தேகங்களெல்லாம் நிவர்த்தியாய் விட்டதாலும் இருவரும் பரஸ்பரம் சந்தோஷத்துடனும் அன்புடனும் இருந்தனர். கற்பகத்தின் கையில் வைத்துக்கொண்டிருந்த பிடிலை வாசிக்கும்படி துளசிங்கம் பிரபு கேட்டுக்கொண்டான். அவளும் அவனுடைய வேண்டுதலுக் கிணங்க முயற்சித்தபோது கற்பகத்தின் தமக்கையான ராஜேஸ்வரி மிக அவசரத்துடன் அங்கேவந்து, வெளியில் உலாவச் சென்றிருந்த ஹேமவதி சீமாட்டி வந்து விட்டதாகவும் அச் சீமாட்டி சொற்ப நேரத்துக்குள் தோட்டத்தில் உலாவுவதற்கு வரப்போவதாகவும் அறிவித்தாள்.

அதைக்கேட்ட துளசிங்கம் பிரபு அவசரமாக மற்றொரு

முறை தன் காதலி கற்பகத்தை அணைத்துக்கொண்டும், காதலியின் சகோதரியான ராஜேஸ்வரியின் கையைக் குலுக்கி விட்டும் இருவரிடமிருந்தும் விடைபெற்றும் அங்கிருந்து வெளியேறிவிட்டான். காதலர் இருவரும் சந்தித்ததன் பயனாக நம்பிக்கையும் சந்தோஷமும் ஏற்பட்டது. காதலியின் மனத்திலிருந்துகொண்டு அவளை வருத்தி வந்த சந்தேகங்கள் நிவர்த்தியாயின. தன் காதலியினிடமிருந்து உறுதிமொழி கிடைத்ததால் காதலனும் அளவிலா ஆனந்தமடைந்தான்.

—:o:—

30-வது அத்தியாயம்

ஷண்பகவல்லியின் துயரம்

இப்போது நாம் துக்கத்துடன் இருக்கும் ஷண்பகவல்லியைக் கவனிப்போம். ஹேமவதி சீமாட்டி, மதனவல்லிச் சீமாட்டியின் வீட்டிற்குச் சென்று ஷண்பகவல்லியின் எதிரில் அவளது மனமார்ந்த காதலனை மோகனதாஸைப்பற்றித் தப்புந் தவறுமாய் எதை எதையோ சொல்லி விட்டதாலும், அவ்விளைஞன் தன்னைக்கண்டு காதலித்ததாகக் கூறியதாலும், ஷண்பகவல்லி துக்கத்துடன் இருந்தாள் என்று முன் அத்தியாயத்திலேயே கூறியிருக்கிறோமல்லவா? ஹேமவதி சீமாட்டி மோகனதாஸைப்பற்றிப் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு ஈட்டியைப்போல் ஷண்பகவல்லியின் ஹிருதயத்தில் பாய்ந்ததென்பதை அறியாத மதனவல்லியைச் சீமாட்டி, ஷண்பகவல்லியிடம் மோகனதாஸின் அயோக்கியத் தனத்தைப்பற்றிப் பலவாறு பேசலானாள் அப்போது ஷண்பகவல்லி தன் உணர்ச்சியை மதனவல்லி அறிந்துகொண்டால் சந்தேகம் அதிகரித்து விடும் என்னும் அச்சத்

துடன் அதை ஒருவாறு அடக்கிக்கொண்டு ஒன்றும் அறியாதவளைப்போல் நிதானமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள் மதனவல்லிச் சீமாட்டி மோகனதாஸைப்பற்றிக் கண்டபடி பேசிய பின்னர் தன் சேவகனைக் கூப்பிட்டு, இனி மோகனதாஸ் அம்மாளிகைக்கு வந்தால், அவனை வேலையினின்றும் நீக்கிவிட்டிருப்பதாகவும், ஆதலின் அவன் அம்மாளிகையின் பக்கமும் இனி திரும்பிப் பார்க்கலாகாதென்றும், அவன் சம்பளத்தைக் கணக்குப் பார்த்துத் தீர்த்து விடும்படியும் கட்டளை யிட்டாள். அச்சேவகன் அப்படியே ஆகட்டுமென்று சொல்லிவிட்டுச் சென்றான்.

இதை யெல்லாம் கேட்கக் கேட்க ஷண்பகவல்லியின் ஹிருதயம் துக்கத்தால் வெடித்து விடும்போ லிருந்தது. ஆகவே அவள் ஏதோ ஒரு காரணம் கூறிவிட்டு அவ்வறையை விட்டுத் தன் அறைக்குச் சென்று படுக்கையில் விழுந்து புரண்டுகொண்டே கண்ணீர் விட்டு அழலானாள். இந்த அழுகைக்குக் காரணமென்ன? அவளுக்கு மோகனதாஸினிடம் ஏற்பட்டுள்ள உண்மையானதும் அளவு கடந்ததுமான அன்பே காரணமாகும். அவள் அவனிடம் காதல் கொண்டிருந்ததால் அவனைப்பற்றிய தூஷணைகளைக் கேட்டதும் அவளுக்குத் துக்கம் அதிகரித்து விட்டது. சிறிது நேரம் குழந்தையைப்போல் அழுத பின்னர் தன் படுக்கையிலேயே எழுந்து உட்கார்ந்து கொண்டு பலவாறு தன் மனத்திலேயே சிந்திக்கலானாள்.

ஹேமவதி சீமாட்டி சொன்ன கதையை அப்படியே முழுதும் நம்ப அவளால் முடியவில்லை. ஆனால் அவ்விஷயத்தில் பலவிதமான சந்தேகங்கள் கொள்ளாம லிருக்கவும் முடியவில்லை. மோகனதாஸைப்பற்றி ஹேமவதி கூறியதற்கு ஏதேனும் சொற்ப அஸ்திவாரமேனும் இருக்கும்

என்று நம்பினள். தன்னிடம் தனியாக் காதல் கொண்டிருப்பதாகக் கூறிய அவன் வேறொரு மாதாகிய ஹேமவதியை நேசித்து அவளது இன்பத்தைப் பெற முயற்சித்தான் என்றால் ஷண்பகவல்லிக்கு ஆத்திரம் ஏற்படுவது சகஜம்தானே? அவனது உண்மையில் அவளுக்குச் சிறிதும் நம்பிக்கை யில்லாமற் போகவில்லையென்றாலும்; உலக அனுபவங்களிலும், தந்தா சூழ்ச்சிகளிலும் அனுபவமில்லாதவளாதலால், ஹேமவதி சீமாட்டி தன் கர்வத்தால் இவ்வாறு அபாண்டம் சுமத்தியிருப்பாள் என்பதை அறியாமல் தன் காதலன் நடத்தையில் சிறிது வெறுப்புக் கொண்டாள். எனினும் அவனிடம் அவளுக்கு அளவு கடந்த காதல் ஏற்பட்டிருந்ததால் இச்சிறு சந்தேகத்துக்காக அவனை மறந்து வெறுத்துவிடவும் அவளால் முடியவில்லை. எப்படியாவது அவனைச் சந்தித்து இது விஷயமாய் அவன் என்ன சமாதானம் சொல்கிறான் என்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினாள். எனினும் அடுத்த நிமிஷமே அவளுக்கு, 'சீ! மற்றொரு மாதை நேசித்து அவளது இன்பத்தையும் பெற பலாத்காரமாக முயற்சித்த அவனை நாம் இன்னமும் பார்ப்பதா?' என்னும் எண்ணம் உண்டாகும். இவ்வாறு உலக அனுபவமற்ற சிறுபெண்ணாகிய அவளது மனம் பலவாறு ஊசலாடிற்று.

இறுதியில் அவள், 'அவன் என்ன சமாதானம் சொல்வான்? ஹேமவதிசீமாட்டி கூறிய இவ்வபாண்டத்திற்கு ஏதேனும் அஸ்திவாரம் இல்லாமலிராது. சிறிது அஸ்திவாரம் இருந்தாலும் மோகனதாஸ் என்னைத் துரோகம் செய்தான் என்றுதானே நினைக்கவேண்டும். ஆ! அவன் நேற்று பகல் என் காலடியில் வீழ்ந்து என்னிடம் அவனுக்குள்ள காதலைப் பற்றி விளக்கியதைப் பார்த்தால் அவன் மறுநிமிஷமே

வேறெரு இடத்தில் சென்று இவ்வாறே காதல் வெளிப் படுத்தி யிருப்பான் என எவரேனும் நம்ப முடியுமா? முடி யாது. அது இயற்கைக்கும் விரோதமாக இல்லையா? மோகன தாஸ் என்னும் உத்தமன் இவ்வாறு அக்கிரமம் செய்திருப்பா னென நினைக்க முடியவே இல்லை. அவன் பரம அயோக்கிய னென்று யாரேனும் நினைக்கவும் முடியுமா? ஆனல் ஹேம வதி சீமாட்டி இவ்வாறு கற்பனையாகக் கூறியிருப்பாளோ! அவன் விஷயத்தில் பொய் சொல்லவேண்டிய அவசியம் அவ ளுக்கென்ன? பெருமைக்காக அவள் அப்படிச் சொல்லி யிருப்பாளோ என்று நினைக்கவும் முடியவில்லை. எவ்வளவோ பெரிய பிரபுக்கள் அவளை நாடியிருப்பார்கள். அதையெல் லாம் லட்சியம் செய்யாத அவள் இந்த ஆசிரியன் விஷயத் திலா பெருமை கொள்ளவேண்டும்? கெட்ட எண்ணத்துடன் இவ்வாறு கூறியிருப்பாளென்றும் நினைக்க முடியவில்லை. ஹேமவதி சீமாட்டி அவ்வளவு கொடிய சுபாவமுடையவ ளல்ல. ஓ! நான் ஒன்றும் புரியமல் இவ்வாறு அவஸ் தைப்படுகிறேன். மோகன தாஸை நான் அறியாமலோ அல் லது நேசிக்காமலோ இருந்திருந்தால் அவள் தேகமே துடித் தது.

மறுபடியும் அவள், 'ஓ மோகன தாஸ் உண்மையி லேயே ஒரு குற்றமும் அறியாதவனுயின் மதனவல்லி சீமாட்டி இவ்வாறு இனி அவன் இம்மாளிகைக்கு வரக் கூடாதெனக் கட்டளை பிறப்பித்தது அக்கிரமமல்லவா? அவன் இனி இங்குவரக்கூடாதென்று சொல்வதும், கணக் குப் பார்த்துப் பணத்தைக் கொடுத்துவிடுவதாகவும் சொல் வது அவனிடம் ஏதோ அபாரமான குற்றத்தை ஸ்தாபித் தது போலல்லவோ இருக்கிறது! அவன் உண்மையிலேயே ஒன்றும் அறியாதவனுயின் இதனல் அவன் மனம் அதிகம்

புண்படாதா? இதுமட்டுமா? அவனுடைய பெயரே கெட்டு விடாதா? மேலும் ஹேமவதி சிமாட்டியே கங்கணம் கட்டிக்கொண்டு அவனைப் பற்றிய புகாரை ஊரெல்லாம் பரவச் செய்து கொண்டிருக்கிருள். அவளுக்கு ஏதேனும் அஸ்திவாரம் இல்லாவிட்டால் அவன் இப்படி சொல்வாளா? அஸ்திவாரம் இல்லாமல் அவள் சொல்ல மாட்டாள் என்றே நினைக்கிறேன். இதனுல் மோகனதாஸ் பொய்யனென்றே ஏற்படுகிறது. ஐயோ! நான் ஏன் அவனை நேசித்தேன்? ஆனுல் உண்மைக் காதலுக்குப் பல சோதனைகள் உண்டு என்று தானே பல நாவல்களிலும் கூறப்பட்டிருக்கின்றன. பெரிய கவியாசர்களெல்லாம் காதல் அதிக துன்பத்தையும் துயரத்தையும் தரக்கூடியது என்றல்லவோ வருணித்திருக்கிருர்கள். காதல் பலவகையான கஷ்டத்தையும் அளிக்கக் கூடியதென்று பண்டிதர்கள் விவரித்திருக்கிருர்கள். அவர்கள் உலக அனுபவத்தை யெல்லாம் ஆராய்ந்துதானே இவ்வாறு எழுதுகிருர்கள். ஆதலின் அது அனுபவத்தில் கண்ட உண்மையாகும். அவ்வுண்மையை யாரும் மறுக்கமுடியாது. ஆகவே உண்மைக் காதல் விஷயத்தில் பல கஷ்டங்கள் ஏற்படும் என்பது தெளிவாகிறது. காதல் என்னும் ரோஜா புஷ்பம் சிற்சில சமயங்களில் அரும்பாக இருக்கும்போதே உலர்ந்துவிடுவதுமுண்டு. ஐயோ! நான் காதலென்னும் புஷ்பத்தின் வாசனையையும் நுகரவில்லை! இனிமைதரக்கூடிய புஷ்பமென்று நினைத்தது எனக்கு விஷத்தைத் தரக்கூடியதாக வல்லவோ மாறிவிட்டது' என்று பலவாறு புலம்பினுள். அவள் இவ்வாறு தடுமாறிய மனத்துடன் சிந்தை நிரம்பியவளாய் இருந்ததால் இந்த மனக்கவலையை அடியோடு ஒழித்து நிம்மதியாய் இருக்கவேண்டு மென்று நிச்சயித்தாள் அவள் எப்படியாவது உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டு

மென்னும் முடிவுக்கு வந்தாள். இவ்வாறுதடுமாறியமனத்துடன் சிந்தை நிரம்பியவளாய் இருந்ததால் இந்த மனக் கவலையை அடியோடு ஒழித்து நிம்மதியாய் இருக்கவேண்டுமென்னும் முடிவுக்கு வந்தாள். அவள் எப்படியாவது உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டுமென்னும் முடிவுக்கு வந்தாள். இவ்வாறு நிச்சயமற்ற நிலைமையில் இருப்பது சரியல்லவென்று கருதினாள். ஹேமவதி சீமாட்டி மோகனதாஸைப் பற்றிக் கூறியதெல்லாம் உண்மையென்று தெரிந்துவிடுமாயின் எப்படியாவது செய்து தனக்கு அவனிடம் ஏற்பட்டுள்ள அன்பை மறந்துவிடுவது என்று நிச்சயித்தாள். அதற்கு மாறாக ஹேமவதி சீமாட்டி கூறிய தனைத்தும் பொய்யாய் இருந்து மோகனதாஸ் குற்றமற்ற பரிசுத்தனாயிருப்பின் ஹேமவதி அவனைப்பற்றிப் புகார் செய்ததை அவனிடம் தெரிவித்து விடவேண்டும் என்று நினைத்தாள். ஆகவே ஷண்பகவல்லி எப்படியாவது மோகனதாஸைச் சந்திப்பதென்று முடிவு செய்தாள்.

ஆனால் அவனை அவள் சந்திப்பதெப்படி! மோகனதாஸ் அம்மாளிகைக்கு வந்தால் அவனை உள்ளே விடாமலேயே இனி அவள் அங்கு வாலாகாதெனத் தெரிவித்து விடும்படி மதனவல்லிச் சீமாட்டி வேலைக்காரனிடம் கட்டளையிட்டிருக்கிறாளல்லவா! அவனுக்கு ஒரு கடிதம் எழுதலாமென்று நினைத்தாலோ அவனை எங்கு, எப்படிச் சந்திப்பதாகத் தெரிவிப்பது என்னும் கவலை அதிகமாய் விட்டது. ஷண்பகவல்லி இருந்த நிலைமையில் விரைவில் ஏதேனும் தீவிரமான முறையைக் கைக்கொள்வதே நலமென்று முடிவு செய்தாள். ஆகவே அவள் தன் உணர்ச்சியையெல்லாம் ஒருவாறு அடக்கிக்கொண்டு களங்கமற்ற முகத்துடன் மாடியினின்றும் கீழே இறங்கி வந்தாள். அவள் மதனவல்லிச் சீமாட்டி

அன்று இரவைக் கழிப்பதற்கு என்ன திட்டம் போட்டிருக்கிறுள் என்பதை அறியவே வந்தாள். அப்படியே இழேவந்து மதனவல்லிச் சீமாட்டியுடன் சம்பாஷித்த சொற்ப நேரத்துக்குள் தான் விரும்பியதை அறிந்துகொண்டு விட்டாள். அன்று மாலை மதனவல்லி ஒரு பணக்கார மாதின் வீட்டுக்கு விருந்துக்குச் செல்வதெனத் தீர்மானித்திருந்தாள். வயதான பல மாதர்களே சேரும் ஒரு இடத்துக்குத் தன்னை அழைத்துச் செல்ல மாட்டாள் என அறிந்ததும், மாளிகையில்தான் தனியே இருக்கப் போவதை உணர்ந்தாள். காலமும் கழிந்து வந்தது. ஒவ்வொரு மணி நேரம் கழிவதும் ஷண்பகவல்லிக்கு ஒரு யுகமாகத் தோன்றியது. ஒரு குறிப்பிட்ட காரியத்தைக் குறித்த நேரத்தில் முடிக்க விரும்புவோர் அனைவருக்குமே அக்குறிப்பிட்ட நேரம் வரும் வரை ஒவ்வொரு யுகமாகத் தோன்றுவது சகஜ மல்லவா? எப்போதும் மணி என்பது எவருடைய லட்சியத்தையும் கவனியாமல் காற்றாய்ப் பறக்கிறது என்று சொல்வது வழக்கம். ஆனால் நமது ஷண்பகவல்லியின் விஷயத்தில் மணி பறக்கவுமில்லை. மெதுவாக நடக்கவுமில்லை. இருந்த இடத்திலேயே அசையாமல் இருப்பதுபோல் தோன்றிற்று. ஷண்பகவல்லி இவ்வாறு கவலையுடனும் ஆவலுடனும் குறிப்பிட்ட ஒரு சம்பவத்தை எதிர் பார்த்துக்கொண்டு காத்திருந்தபோது மோகனதாஸ் அம்மாளிகையின் கதவை இடித்த சத்தம் கேட்டது. திடுக்கிட்டாள். உடனே அக்கதவு அசட்டையாக மூடப்படுவதுபோல் பலத்த சத்தத்துடன் மூடப்பட்டதையும் அறிந்தாள். அப்போது அவள், 'ஆ! மோகனதாஸைப்பற்றி ஹேமவதி கூறியது பொய்யாயின் இப்போது அவனுக்கு ஏற்பட்டது பெரும் அவமானம்தானே! அப்படியின்றி அவள் கூறியது உண்மையாயின் அவனுக்கு இது

தக்கதோர் தண்டனையே யாகும்' என்று நினைத்தாள். இந்த ஒரு சம்பவம்தான் அவளுக்கு உணர்ச்சியைக் கொடுத்தது. மற்றப்படி அவள் எதிலும் கவனம் செலுத்தாமல் உட்கார்ந்திருந்தாள்.

மாலை ஆகாரம் அருந்தும் வேளை வந்தபோது மதனவல்லிச் சீமாட்டியும் ஷண்பகவல்லியும் ஒன்றாக உட்கார்ந்து ஆகாரத்தை உட்கொண்டனர். சாதாரணமாகச் சாப்பிடும் போதுதான் உலக விவகாரங்களை யெல்லாம் பேசுவது நம்மவர் வழக்க மல்லவா? சுகாதார சாஸ்திரம் சாப்பிடும்போது பேசாமல் மௌனமாக இருந்து ஆகாரத்தை நன்றாக மென்று சாப்பிடவேண்டும் என்று கூறி யிருந்த போதிலும் அப்போதுதான் ஜனங்கள் பலவித விஷயங்களைப்பற்றிப் பேசி அதன் காரணமாகச் சிரிப்பதும் அழுவதுமாக இருக்கின்றனர். ஆகாரம் உட்கொள்ளும்போது சிரிக்கவோ அழவோ கூடாதென்பது விதி. மாதர்கள் இரண்டொருவர் ஒன்றாகச் சாப்பிட உட்கார்ந்தால் எதை எதையோ பேசிக்கொண்டே ஒருமணி நேரம் வரை சாப்பிடுகிறவர்களும் இருக்கிறார்கள். அம்முறைப்படி ஷண்பகவல்லிச் சீமாட்டி சாப்பிட்ட தனால் மோகனதாஸின் அயோக்கியத் தனத்தைப் பற்றியும் வெகுவாகக் கண்டித்துப் பேசினாள். அதனால் ஷண்பகவல்லிக்கு அதிக துக்க முண்டாயிற்றென்றாலும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் அவளும் மதனவல்லி சொன்னதற்கெல்லாம் தலையை அசைத்துக் கொண்டிருந்தாள். ஆகவே சாதாரணமாக இன்பத்தைத் தரவேண்டிய அந்தச் சாப்பாட்டுவேளையும் அவளுக்குத் துயரத்தைக் கொடுப்பதாகவே இருந்தது. ஆகாரம் முடிந்ததும் மதனவல்லிச் சீமாட்டி வெளியில் சிநேகிதையின் வீட்டுக்குச் செல்வதற்காக வேறு உடைகளை கொள்ளச் சென்றபோது

ஷண்பகவல்லிக்குச் சிறிது ஆறுதல் ஏற்பட்டது. அவள் தன் அறைக்குச்சென்று கண்ணீர்விட்டுத் துக்கப் பட்டாள்.

ஹேமவதி சீமாட்டியின் குமாரி கற்பகத்துக்கு அவளது இரகசியத்தை யறிந்த வேலைக்காரி பார்வதி இருந்ததைப்போல் ஷண்பகவல்லிக்கு யாருமில்லை, அவள் எல்லா வேலைக்காரியிடமும் கௌரவமாகவே நடந்து கொண்டு வந்தாள். தன் கௌரவம் அவர்களின் முன் எம்முறையிலும் கெடாதபடி சர்வ ஜாக்கிரதையுடன் நடந்து கொண்டாள். ஷண்பகவல்லி கள்ளங் கபடமற்றவ ளாதலாலும், உயர்வு தாழ்வு என்னும் பாழும் வித்தியாசத்தை அனுஷ்டிக்காதவ ளாதலாலும் அவள் தன் வேலைச்காரர்களை யெல்லாம் சமமாகவே நடத்தினுள் என்றாலும் அவர்கள் தன்னிடம் அளவு கடந்து நெருங்க இடந்தாரமலேயே இருந்தாள். ஷண்பகவல்லியின் மனதில் தோன்றிய இரகசியங்களை யெல்லாம் அவள் தன் மனமென்னும் பொக்கிஷத்திலேயே மூடி வைத்திருந்தாள். ஆதலின் அவளது இரகசியத்தை யறிந்த அந்தரங்க வேலைக்காரி எவருமே அவளுக்குக் கிடையாது.

அதனுல் அவளுக்கு இப்போது கஷ்டம் ஏற்பட்டது. மதனவல்லி சீமாட்டி மாளிகையில் இல்லாத சமயத்தில் இரண்டுமணி நேரமாவது வெளியில் போய் வர விரும்பினுள். அவள் அப்படிப் போய் வருவது வீட்டில் யாருக்கும் தெரியக்கூடா தென்பது அவளது அபிப்பிராயம். ஆனுல் அக்காரியத்தை எப்படிச் செய்து முடிப்பது? அவள் எப்போதுமே பரிசுத்தமான எண்ண முடையவளாதலால் இரகசியமான எக்காரியத்தையும் செய்ய அவள் வெறுத்தா ளென்றாலும் இப்போது அவள் ஏதேனும் செய்து தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ள விரும்பினுள். சிறிது நேரம் சிந்தித்த பின்னர் என்ன செய்வதென்னும் முடிவுக்கு வந்தாள். மதன

வல்லிச் சீமாட்டி வெளியில் போய்விட்டதும் ஷண்பகவல்லி தன் அறையிலிருக்கும் மணியை அடித்தாள். அப்போது அவளது சௌகரியங்களைக் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த சிங்காரி என்னும் வேலைக்காரி அவ்விடம் வந்தாள். அவளிடம் ஷண்பகவல்லி, 'அம்மா! எனக்கு இப்போது உடம்பு ஒருமாதிரி இருக்கிறது. நான் ஒன்றிரண்டு மணி நேரம் நிம்மதியாகப் படுத்துக் கொள்ளதென்று தீர்மானித்திருக்கிறேன் நான் மறுபடியும் மணியடித்து உன்னைக் கூப்பிடும் வரையில் நீ இங்கு வரவேண்டாம்' என்றாள். சிங்காரியும் எவ்வித சந்தேகமும் கொள்ளாமல் அப்படியே ஆகட்டுமென்று சொல்லிவிட்டுச் சென்றாள். இரவு சுமார் ஒன்பது மணி இருக்கும். ஷண்பகவல்லி தன் அறையைப் பூட்டிக்கொண்டு எளிய உடையையும் முகமூடியையும் அணிந்து ஒரு கரிய போர்வையைப் போர்த்திக்கொண்டு மெதுவாகப் புறப்பட்டு அம்மாளிகையின் பின்புற வாயில் வழியே யாருக்கும் தெரியாமல் வெளியேறி விட்டாள்.

ஷண்பகவல்லி மாளிகையை விட்டுத் தன்னந் தனியளாய் எங்கோ சென்று கொண்டிருக்கையில் அடிக்கடி பின்புறம் திரும்பிப் பார்த்துகொண்டே சென்றாள். யாரேனும் இரகசியமாக ஒரு காரியத்தைச் செய்யும்போது வேறு எவரேனும் வந்து விடுகிறார்களோ என்று அடிக்கடி கவனிப்பது வழக்கம். இவ்வாறு வயது வந்த ஒரு பெண் தனியாகச் சென்று தக்க பருவத்தை யடைந்துள்ள ஒரு வாலிபனை அதுவும் இரவு ஒன்பது மணிக்குமேல் காண்பது குற்ற மல்லவா என்று நினைத்தாள். எனினும் அதற்கு முன்னாள் அவர்களிருவருக்கும் இடையில் நடந்த சம்பவத்தைக் கவனிக்கும்போது தன் காதலன் என முடிவு செய்யப்பட்ட அவனைக்கண்டு அவன் மீது ஏற்பட்டுள்ள புகாருக்கு

அவன் என்ன சமாதானம் சொல்லப் போகிறான் என்று கேட்பது தவறல்ல என்றும் நினைத்தாள். அவன்மீது சாட்டப்பட்டுள்ள குற்றம் உண்மையாயில் தான் இவ்வாறு தனியாகச் சந்தித்ததைப்பற்றி வெளியிம் சொல்லிக்கொண்டு தனக்கு ஏற்பட்டுள்ள அவமானத்தை இரட்டிப்பாக்கிக் கொள்ள மாட்டான் என்றும், ஹேமவதி சீமாட்டி கூறியது பொய்யான அபாண்டமாய் இருக்குமாயின் அவள் எடுத்துக் கொண்ட முயற்சியை அவன் பாராட்டுவான் என்றும் அவள் நினைத்தாள். இவ்வாறெல்லாம் நினைத்ததால் அவள் தைரியமாக முன்னோக்கிச் சென்றாளே யொழிய மீண்டும் வீட்டுக்குத் திரும்பிவிட வேண்டுமென்னும் அச்சம் உண்டாகவில்லை.

அவள் முன்னோக்கிச் சென்றபோது ஒரு நந்தவனத்தை யடைந்ததும் அதற்குச் சமீபத்திலுள்ள ஒரு கட்டடத்தின் அருகில் நின்றாள். அங்கேதான் அதற்கு முன்னாள் இரவு தான் அக்கட்டத்தில் நடனமாடிக்கொண்டிருந்தபோது அவ்வழியே சென்ற மோகனதாஸ் அவளைச் சந்தித்துப் பாஸ்பரம் கைக்குட்டையை ஆட்டித் தங்கள் அன்பைத் தெரிவித்துக் கொண்டார்கள். ஆதலால் அங்கு சென்றதும் முன்னாள் நடந்த சம்பவங்கள் அவள் ஞாபகத்துக்கு வந்ததால் அவள் துக்கம் அதிகரிக்க விம்மி, விம்மி அழுதாள். பின்னர், 'சீ! ஹேமவதி சீமாட்டியின் இன்பத்தை யனுபவிப்பதற்காக மோகனதாஸ் அவ்விதம் கெஞ்சிக் கூத்தாடி விட்டு மறு நிமிஷமே இவ்விடத்தில் என்னைக்கண்டு அன்புடன் கைக்குட்டையை ஆட்டியிருக்க முடியுமா? இல்லவே இல்லை. அவன் எனக்குத் துரோகம் செய்திருக்கவே மாட்டான். ஹேமவதி சீமாட்டி ஏதோ வேறு காரணத்தால் இவ்வாறு அவன்மீது அபவாதம் சுமத்துகிறாள் போலிருக்கிறது' என்று நினைத்தாள்.

18657

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922வரு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்குமுன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம், 4-ம், 5-ம், 6-ம் பாகம் நாவல்கள் முடிவு பெற்று இப்பொழுது இரத்தினபுரிரகசியம் 7-ம்பாகம் என்கிறநாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0

ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஆம் ஜுலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப் பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.			
இரத்தினபுரி இரகசியம் 6-பாகமும் ...	11	10	தினகரசுந்தரி ரூபா	1	0
பவளத்தீவு 2-பாகமும்...	3	0	தபால்கோள்ளைக்காரர்	0	14
கற்கோட்டை ...	2	0	ரத்தினபாய் ...	1	18
மின்சார மாயவன் ...	1	8	வீரநாதன் ...	0	10
தேவசுந்தரி ...	1	4	குணசுந்தரன் ...	0	12
கனகபூஷணம்2பாகம்...	3	8	மஞ்சள் அறையின் மர்மம்	1	2
இராஜாமணி ...	2	0	கமலசேகரன் ...	1	12
ஆனந்தஸிங் ...	2	0	பூங்கோதை ...	0	12
மதனபூஷணம் ...	1	0	இந்திராபாய் ...	2	8
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ...	9	10	அமராவதி 2 பாகமும்	4	0
			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
			லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.